

ஆண்டறிக்கை 2022



நகரக் குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபை

உள்ளடக்கம்

- தவிசாளரின் மீளாய்வு 4
- பணிப்பாளர் சபையின் மீளாய்வு மற்றும் ஒழுங்கமைப்பு 6
- ஆலோசனைக் குழுவின் மீளாய்வு மற்றும் ஒழுங்கமைப்பு 7
- கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவின் மீளாய்வு 8
- நகரக் குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் நிறுவன ஒழுங்கமைப்பு.... 9
- பௌதீக அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் 10
- பூர்த்தி செய்யப்பட்ட வீடமைப்புக் கருத்திட்டங்களின் வீட்டு உரித்து மற்றும் உறுதிகளை வழங்கிவைத்தல் 15
- மனிதவள அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் 16
  நகரக் குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் உள்ளக
- உழைப்புக்கள்(அறவீடுகள்) முன்னேற்றம் - 2022 25
- மனிதவளம் மற்றும் நிறுவன முகாமைத்துவம 26
- குயெட யுஉஉழரவெள 29
- ஆடிட்டர் ஜெனரலின் அறிக்கை 36

நோக்கு

"பெருமைமிகு வாழ்க்கையொன்றுக்கான நிலைபேறான நகரக் குடியிருப்புகளைக் கட்டியெழுப்புதல்"

செயற்பணி

"ஆரோக்கியமான, ஒருங்கிணைந்த மற்றும் பாதுகாப்பான நகரக் குடியிருப்புக்களைக் கட்டியெழுப்புதல் மற்றும் பௌதீக, சமூக மற்றும் பொருளாதார ரீதியில்

நகரக் குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் குறிக்கோள்கள்

- ஒவ்வொரு நகர்ப்புறப் பிரதேசத்திற்கும் திட்டமிடப்பட்ட ஒருங்கிணைந்த நகரக் குடியிருப்புக்களை ஏற்படுத்தல்.
- நகர்ப்புற சமுதாயத்தினர்களின் பொருளாதார, சமூக அபிவிருத்தியை மேம்படுத்தல்.
- நகர்ப்புற சமுதாயத்தினர் மத்தியில் ஆதனங்களின் உரித்துப் பற்றிய உணர்வை ஏற்படுத்தல்.
- அதிகாரசபையின் செயலாற்றுகையை மிகச் சிறந்த மட்டத்திற்கு கொண்டுவருதல்.
- சுய நிதியைக் கொண்ட நிறுவனமொன்றாதல்.

தவிசாளரின் மீளாய்வு



நகரக் குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபையினால், நகர்ப்புறப் பிரதேசங்களில் வாழும் குறைந்த வருமானம் பெறும் மக்களின் வாழ்க்கைத் தரத்தை சமூக, பொருளாதார மற்றும் கலாசார ரீதியில் வலுவூட்டுவதற்காக பௌதீக அபிவிருத்தி மற்றும் மனித அபிவிருத்தி என்ற வகையிலான இருவகை அணுகுமுறைகளின் ஊடாக கருத்திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்துவது மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

அதற்கமைய, 2022 ஆம் ஆண்டில் நகரக் குறைந்த மற்றும் நடுத்தர வருமானம் பெறும் சமுதாயத்தினருக்காக பௌதீக அபிவிருத்திக் கருத்திட்டங்கள் மற்றும் மனித அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் திட்டமிடப்பட்டன. இதன் போது லுனாவ 'சீ வீவ் ரெசிடன்சீஸ்' கருத்திட்டத்தின் வீடுகளை விற்பனை அடிப்படையில் நடுத்தர வருமானம் பெறும் சமுதாயத்தினருக்கு நீக்கம் செய்யும் செயன்முறையை வெற்றிகரமாக மேற்கொள்ள முடிந்தமை அதிகாரசபை பெற்றுக் கொண்டுள்ள விசேட சந்தர்ப்பமொன்றாகும்.

நகரக் குறைந்த வருமானம் பெறும் சமுதாயத்தினருக்காக திட்டமிடப்பட்ட பௌதீக அபிவிருத்திக் கருத்திட்டங்களான கஹதுடுவேகொட மற்றும் நாவலப்பிட்டி குறைந்த வருமானம் பெறும் வீடமைப்புக் கருத்திட்டங்களின் ஆரம்ப அங்கீகாரங்களைப் பெற்றுக் கொள்ளல் மற்றும் அரச-தனியார் பங்குடைமை பொறிமுறையின் கீழ் அரசுக்கு செலவுச் சுமையாக இருக்காது இக்கருத்திட்டங்கள் 02 ஐயும் அமுல்படுத்த அமைச்சரவையின் அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்ள 2022 ஆம் ஆண்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

மேலும், நகரக் குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபையினால் வத்தளை, வெலிசர ஹயிட்ஸ் நடுத்தர வருமானம் பெறுவோருக்கான வீடமைப்புக் கருத்திட்டம், ஸ்ரீ ஜயவர்த்தனபுர கோட்டே கலப்பு அபிவிருத்தி வீடமைப்புக் கருத்திட்டம், நிட்டம்புவ ஒசர்ட்வத்த வீடமைப்புக் கருத்திட்டம் மற்றும் கடுவளை கலப்பு அபிவிருத்தி வீடமைப்புக் கருத்திட்டம் ஆகிய கருத்திட்டங்களின் காணிகளை சாட்டுதல் செய்துகொள்ளும் நடவடிக்கைகளை மேற்கொண்டமை மற்றும் முதலீட்டாளர் ஒருவரை தெரிவு செய்துகொள்வதற்காக கருத்திட்டங்களுக்கு விருப்பம் கோரும் (EOI) ஆரம்ப கட்டப் பணிகளை 2022 ஆம் ஆண்டில் மேற்கொள்ள முடிந்தது.

பௌதீக அபிவிருத்திக் கருத்திட்டங்கள் மேலே குறிப்பிடப்பட்டுள்ளவாறு அமுல்படுத்தப்பட்டதுடன், நகரக் குறைந்த மற்றும் நடுத்தர வருமானம் பெறும் சமுதாயத்தினருக்காக மனித அபிவிருத்திக் கருத்திட்டங்கள் பல நாடளாவிய ரீதியில் மேற்கொள்ளப்பட்டன. இதன் போது ரூ.மி. 10 ஆன ஏற்பாடுகளைப் பயன்படுத்திக் கொண்டு சுயசக்தி மனித அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ், 11 மாவட்டங்களை உள்ளடக்கியவாறு நகரக் குடியிருப்புக்களில் வாழும் சமுதாயத்தினரின் வாழ்க்கைத் தரத்தை சமூக, பொருளாதார மற்றும் கலாசார ரீதியாக மேம்படுத்துவதற்கு 'சௌபாக்யா பிரஜா சக்தி', 'சௌபாக்யா சவிபல', 'சௌபாக்யா நெனபல'', ''சௌபாக்யா திவிவருன'' மற்றும் 2022 உலகக் குடியிருப்பு தின நிகழ்ச்சித்திட்டங்களை முன்னிட்டு நடாத்தப்படும் நிகழ்ச்சித்திட்டங்களும் அமுல்படுத்தப்பட்டன.

நகரக் குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் கடன் அறவிடும் பிரிவினூடாக, அதிகாரசபையினால் பூர்த்தி செய்யப்பட்டுள்ள வீடமைப்புக் கருத்திட்டங்கள் 10 இன் வீடுகளைப் பெறும் பயனாளிகளின் கடன் தவணையை அறவிட்டுக் கொள்ளும் நடவடிக்கைகள் தற்போது முறையாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அதற்கமைய, இதன் முன்னேற்றம் 2021 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 38% ஆன வளர்ச்சியை வெளிப்படுத்துகின்றது.

மேலும், நகரக் குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் ஒட்டுமொத்த பதவியணியின் செயலாற்றுகையை மேம்படுத்துவதற்காக பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களில் அவர்கள் ஈடுபடுத்தப்பட்டார்கள் என்பதுடன், ஊழியர்களின் சாதகமான மனப்பாங்கு மற்றும் ரசனையை மேம்படுத்துவதற்காக வளவாளர்கள் ஊடாக பதவியணியினருக்கு நிகழ்ச்சித்திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டன. ஊழியர்களின் மனநிலைமையை சமமானவாறு பேணிவருவதுடன், சுமுகமாக கடமைகளை மேற்கொள்ளக்கூடிய சூழலை கட்டியெழுப்புவதற்காக மாதாந்த தர்மப் போதனை நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துவது போன்றனவும் மேற்கொள்ளப்பட்டதுடன், அதிகாரசபையின்

ஊழியர்களின் வினைத்திறன், விளைதிறன் மற்றும் ஊழியர்கள் மத்தியில் திருப்தியை ஏற்படுத்தக்கூடிவாறு எல்லாச் சந்தர்ப்பங்களிலும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.
நாட்டில் தற்போது எழுந்துள்ள நிலைமையை நல்ல முறையில் புரிந்துகொண்டு, ஒரு நிறுவனம் என்ற வகையில் ஒட்டுமொத்த பதவியணியினருடனும் இணைந்து இந்நிலைமைக்கு அச்சமின்றி முகம் கொடுத்து, மிகக் குறைந்த செலவில் தொடர்ச்சியாக நகரக் குறைந்த வருமானம் பெறுவோர் மற்றும் நடுத்தர வருமானம் பெறும் சமுதாயத்தினரின் பௌதீக மற்றும் மனித அபிவிருத்திக்காக நாடளாவிய ரீதியில் கருத்திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்தி, நகரக் குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் பிரதான நோக்கத்தை அடைந்துகொள்வதற்கு நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றது என்பதை குறிப்பிடுகின்றேன்.

பிரியந்த கே. ரத்நாயக்க
தவிசாளர்,
நகரக் குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபை

பணிப்பாளர் சபையின் மீளாய்வு மற்றும் ஒழுங்கமைப்பு

நகரக் குறைந்த வசதிகளைக் கொண்ட குடியிருப்புகளில் வாழும் மக்களின் வீடமைப்புச் சிக்கல்களுக்கு தீர்வுகளை பெற்றுக்கொடுத்தல் மற்றும் அவர்களை சமூக, பொருளாதார மற்றும் பொருளாதார ரீதியில் வலுவூட்டுவது நகரகக் குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் முக்கிய நோக்கமாகும். அதற்காக பௌதீக மற்றும் மனித அபிவிருத்தி ஆகிய இருவித அணுகுமுறைகளின் கீழ் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களும், கருத்திட்டங்களும் அமுல்படுத்தப்படுகின்றன.

1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 12வது மற்றும் 13.6வது பிரிவுகளுக்கு அமைய, நகரக் குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபையினால் மேற்கொள்ளப்படுகின்ற சகல கொடுக்கல் வாங்கல்களையும் முறையாக கணக்குகளில் பதிவு செய்து கணக்குப் பதிவேடுகளை பேணிவருவதை உறுதிப்படுத்தும் பொறுப்பு மற்றும் அதிகாரசபையின் கணக்கு நடவடிக்கைகள் மற்றும் குறித்த ஆண்டுக்கான மிகை / குறை பற்றிய உண்மையான மற்றும் நியாயமான கருத்தை பெற்றுக்கொடுக்கின்ற நிதிக்கூற்றுக்களை தயார்செய்ய வேண்டிய பொறுப்பு அதிகார சபைக்கு பொறுப்பளிக்கப்பட்டுள்ளது. அதற்கமைய, முறையாக கணக்கு பதிவேடுகளைப் பேணிவருமாறும், நாளாந்தம் நடாத்தப்படுகின்ற கூட்டங்கள் மற்றும் கணக்காய்வுக் குழுக் கூட்டங்களின் ஊடாக நிதி அறிக்கையிடல் முறையியலை மீளாய்வு செய்யுமாறும் பணிப்பாளர் சபை, அதிகாரசபைக்கு கட்டளையிட்டுள்ளது.

இந்த ஆண்டறிக்கையில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களை தயார்செய்யும் போது, ஒவ்வொரு சந்தர்ப்பத்திற்கும் ஏற்புடையவாறு உரிய கணக்கீட்டு தரநியமங்களை ஏற்புடையதாக்கிக் கொள்வதற்கும், நியாயமாக மற்றும் அறிவுப்பூர்வமான தீர்மானங்கள் மற்றும் மதிப்பீடுகளின் மூலம் உறுதிப்படுத்திக்கொள்வதற்கும் பணிப்பாளர் சபை கவனம் செலுத்தியுள்ளது. அதிகாரசபைக்கு உரித்தான சொத்துக்களைப் பாதுகாப்பதற்கும், மோசடி மற்றும் ஏனைய முறைகேடுகளை கண்டறிதல் மற்றும் அவற்றைத் தடுத்துக்கொள்வதற்கும் பணிப்பாளர் சபை நடைமுறையில் தாம் மேற்கொள்ளக்கூடிய சகல நடவடிக்கைகளையும் மேற்கொண்டுள்ளது. இது தொடர்பில் செயற்படும் போது பணிப்பாளர் சபையினால் அதிகாரசபையின் சொத்துக்களை பாதுகாத்துக் கொள்வதற்கும், அதன் அறிக்கைகள் பற்றிய உண்மைத்தன்மை மற்றும் நம்பகத்தன்மையை நடைமுறைக்கு சாத்தியமானவாறு முடிந்தளவுக்கு பாதுகாத்துக்கொள்ளக்கூடிய வகையில் நகரக் குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் சேவைகளை முறையாகவும் நிறைவேற்றத் தேவையான உள்ளக பரிசீலனைகள், உள்ளக கணக்காய்வு, நிதி மற்றும் ஏனைய கட்டுப்பாடுகளைக் கொண்ட விளைதிறனும் பூரணத்துவமும்மிக்க உள்ளக கட்டுப்பாட்டு முறைமை தாபிக்கப்பட்டுள்ளது.
பணிப்பாளர் சபையின் தவிசாளராக நகரக் குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் திரு பிரியந்த கே. ரத்நாயக்க செயற்படுகின்றார்.

2022.12.31 ஆம் திகதிக்கு நகரக் குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் பணிப்பாளர் சபை பின்வருமாறாகும்.

திரு பிரியந்த கே. ரத்நாயக்க : தவிசாளர், நகரக் குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபை
திரு நிமேஷ் ஹேரத் : தவிசாளர், நகர அபிவிருத்தி அதிகாரசபை
திரு ரஜீவ் சூரியஆரச்சி : தவிசாளர், தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை
திரு பீ.ஏ.ஆர். பியரத்ன : பிரதிப் பணிப்பாளர், கருத்திட்ட முகாமைத்துவம் மற்றும் கண்காணிப்புத் திணைக்களம்
திருமதி ஈ.எம்.என். எதிரிசிங்க : சிரேஷ்ட உதவிச் செயலாளர், உள்ளூராட்சி மாகாண சபைகள் இராஜாங்க அமைச்சு
திரு நலீன் சமரகோன்
திரு கே.ரீ.கே. பிரசன்ன அரம்பத்
திரு ஜி.சி.ஏ.யூ, பெர்ணாந்து
திரு டி.எஸ்.ஜே. ஹேவாவிதாரண

பணிப்பாளர் சபையின் கட்டளைக்கு அமைய,
பணிப்பாளர் சபையின் செயலாளர் : பணிப்பாளர் நாயகம்
நகர குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபை

ஆலோசனைக் குழுவின் மீளாய்வு மற்றும் ஒழுங்கமைப்பு

2008 இன் 36 ஆம் இலக்க நகரக் குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் 10 ஆம் பிரிவுக்கு அமைய ஆலோசனைக் குழு தாபிக்கப்பட்டுள்ளது.
போதியளவில் பால்நிலைசார் பிரதிநிதித்துவத்தைக் கொண்டுள்ளதை உறுதி செய்து ஆலோசனைக் குழுவானது தவிசாளர் மற்றும் உறுப்பினர்கள் 14 பேருக்கு மேற்படாதவாறு ஆலோசனைக் குழு அமைந்திருக்க வேண்டும் என்று நகரக் குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபை சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. அதற்கமைய, 2022.12.31 ஆம் திகதிக்கு அதிகாரசபையின் ஆலோசனைக் குழு பின்வருமாறாகும்.

பேராசிரியர் திரு ரங்கிக்க ஹல்வத்துர : தவிசாளர்
திரு எல்.பி.வி. தர்மேந்திர
திரு காலிங்க திலகரத்ன
திரு என்.டி. ருவன்ன குமார
திரு ஜயந்த குமார அத்தபத்து
திரு ஜே.பி. எல்லேபொல
திரு ஆர்.ஏ.எஸ்.கே. குலரத்ன
திரு ஆர்.ஜி.சி.பி. ரணதுங்க
திரு ஆர்.ஜி.ஜி. தினேஷ்
திருமதி ஆர்.பி. சில்வா
திரு பி.ஜி. ஜயதிலக்க
திரு பிரியந்த ரத்நாயக்க
திரு கே. அனில் விக்ரமசிங்க
திரு கே.எம்.டி.கே. கருணாதாச
திரு ஜி.ஏ.எல்.என். அபேவிக்ரம

கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவின் மீளாய்வு

நல்லதொரு நிதி அறிக்கையிடல் முறைமை காணப்படுவதை உறுதி செய்வதற்கு மற்றும் முகாமைத்துவம் செய்வதற்கு மற்றும் உரிய அலுவலர்களுக்கு சரியான, பொருத்தமான மற்றும் இற்றைப்படுத்தப்பட்ட தகவல்களைப் பெற்றுக் கொடுக்கக்கூடியவாறு, அதனை நல்ல முறையில் முகாமைத்துவம் செய்வதை உறுதி செய்வதற்கும், சட்டங்கள் மற்றும் அதிகாரசபையின் கொள்கைகள் மற்றும் நியாயாதிக்க மற்றும் கூட்டிணைக்கப்பட்ட நிருவாகங்களுக்கு உட்பட்டதாகவும் கணக்கீட்டு மற்றும் உள்ளகக் கட்டுப்பாட்டை முகாமைத்துவம் செய்வதற்கும், மீளாய்வு செய்யும் அதிகாரங்களை கணக்காய்வுக் குழுவிடம் பொறுப்பளிக்கப்பட்டுள்ளது.

பணிப்பாளர் சபைக்கான திறைசேரியின் பிரதிநிதி மற்றும் ஏனைய பணிப்பாளர் சபை உறுப்பினர்கள் இரண்டு பேரை (02) உள்ளடக்கியதாக கணக்காய்வுக் குழு காணப்பட்டது. 01/2022 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டத்தில் அரசாங்க தொழில்முயற்சிகள் வழிகாட்டல்களுக்கு அமைய பணிப்பாளர் சபைக்கான திறைசேரியின் பிரதிநிதி மற்றும் திறைசேரி நடவடிக்கைகள் திணைக்களத்தின் மேலதிக பணிப்பாளர் நாயகம் – அரசாங்க தொழில்முயற்சிகள் திணைக்களம், திரு சமன் ஜயசிங்க குழுவின் தவிசாளராக செயற்பட்டார். திருமதி ஈ.எம்.என். எதிரிசிங்ஹ மற்றும் சட்டத்தரணி திருமதி எவ்.என். சமானா சனூஸ் ஆகியோர் குழுவின் உறுப்பினர்களாக செயற்பட்டார்கள்.

2022.11.26 ஆம் திகதி நடைபெற்ற 07/2022 பணிப்பாளர் சபைக் கூட்டத்தில் பணிப்பாளர் சபைக் குறிப்பு இலக்க 07/2022/N-17 இற்கமைய கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு உறுப்பினர்களாக அரச தொழில்முயற்சிகள் வழிகாட்டல்களுக்கு அமைய பணிப்பாளர் சபைக்கான திறைசேரியின் பிரதிநிதி, பிரதிப் பணிப்பாளர் - கருத்திட்ட முகாமைத்துவம் மற்றும் கண்காணிப்பு, திரு பி.ஏ.ஆர்.சீ. பியரத்ன குழுவின் தவிசாளராகவும், ஏனைய பணிப்பாளர் சபை உறுப்பினர்களான சட்டத்தரணி திரு நலீன் சமரகோன் மற்றும் திரு ஜி.சி.ஏ.யூ. பெர்ணாந்து ஆகியோர் குழுவின் உறுப்பினர்களாக நியமனம் செய்யப்பட்டார்கள். அதற்கமைய 2022.09.02 ஆம் திகதி நடைபெற்ற 02/2022 மற்றும் 2022.09.23 ஆம் திகதி நடைபெற்ற 03/2022 மற்றும் 2022.12.13 ஆம் திகதி நடைபெற்ற 04/2022 ஆம் குழுக் கூட்டங்களின் போது மேற்படி அலுவலர்கள் குழு உறுப்பினர்களாக செயற்பட்டார்கள்.


அரசாங்க கணக்காய்வு அத்தியட்சகர் மற்றும் நேர்வரிசை அமைச்சின் பிரதம உள்ளகக் கணக்காய்வாளர் ஆகியோர் அவதானிப்பாளர்களாக கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்களில் பங்கேற்றார்கள் என்பதுடன், தேவையானவாறு நகரக் குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் பிரிவுத் தலைவர்கள் மற்றும் தேவையான சந்தர்ப்பங்களில் ஏனைய அலுவலர்களும் கூட்டங்களில் பங்கேற்றார்கள். அதிகாரசபையின் பணிப்பாளர் நாயகம் இக்குழுவின் செயலாளராக செயற்பட்டார். உள்ளகக் கணக்காய்வாளரினால் தயார் செய்யப்பட்ட 2022 ஆம் ஆண்டுக்கான உள்ளகக் கணக்காய்வுத் திட்டத்தினை குழு ஆராய்ந்து சிபாரிசு செய்தது.

கணக்காய்வு அறிக்கைகள், கணக்காய்வு வினாக்கள் தொடர்பிலான சிக்கல்கள் மற்றும் விடைகள், உள்ளக மற்றும் வெளிப்புற கணக்காய்வு அவதானிப்புக்கள், உள்ளகக் கட்டுப்பாட்டுக் கட்டமைப்புக்கள் மற்றும் ஆண்டறிக்கைகளை உரிய காலத்திற்குள் தயார் செய்து சமர்ப்பிப்பதன் அவசியத்தன்மை பற்றி விசேட கவனம் செலுத்துவதும் உள்ளடங்களாக மேம்படுத்தல்கள் மற்றும் தேவையான ஏனைய துறைகள் பற்றியும் குழுவின் கலந்துரையாடப்பட்டது. அதற்கமைய, தேவையான சீராக்கல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன், மேற்கொள்ளப்பட்ட தீர்மானங்கள் தொடர்பில் பின்னாய்வு நடவடிக்கைகளும் கலந்துரையாடப்பட்டன. கலந்துரையாடப்பட்ட முக்கிய விடயங்களை உள்ளடக்கிய கூட்டக் குறிப்புக்கள் பணிப்பாளர் சபையிடம் சமர்ப்பிக்கப்பட்டன. உறுப்பினர்கள் மற்றும் அலுவலர்கள் வழங்கிய பெறுமதிமிக்க பங்களிப்பு மற்றும் குறிப்பாக கணக்காய்வுச் செயன்முறையின் போது கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் வழங்கப்பட்ட மிகப்பெறுமதிமிக்க அவதானிப்புக்களையும் இங்கு உயர்வாக மதிக்கின்றேன்.

கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவின் கட்டளைக்கு அமைய,
பணிப்பாளர் நாயகம்
கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவின் செயலாளர்,
நகர குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபை.

நகரக் குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் நிறுவன ஒழுங்கமைப்பு


2022 நிறுவன ஒழுங்கமைப்பு



`

பௌதீக அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம்





`

நகரக் குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் 2022 ஆண்டின் செயற்றிட்டத்துக்கு அமைய 2022 ஆம் ஆண்டில் அமுல்படுத்துவதற்காக குறைந்த வருமானம் பெறும் நகர்ப்புற சமுதாயத்தினருக்காக குறைந்த வருமான வீடமைப்புக் கருத்திட்டங்கள் இரண்டு மற்றும் நடுத்தர வருமானம் பெறும் நகர்ப்புற சமுதாயத்தினருக்கான வீடமைப்புக் கருத்திட்டங்கள் 4 திட்டமிடப்பட்டிருந்தன.

மேலும் 2021 ஆம் ஆண்டில் மக்களிடம் கையளிக்கப்பட்ட லுனாவ "சீ வீவ்" வீடமைப்புக் கருத்திட்டத்தின் வீட்டு அலகுகளை நடுத்தர வருமானம் பெறும் சமுதாயத்தினருக்கு விற்பனை செய்யும் நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டன.

இக்கருத்திட்டங்களில் அடையப்பெற்றுள்ள பௌதீக மற்றும் நிதிசார் முன்னேற்றம் பற்றிய தகவல்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

லுனாவ சீ வீவ் ரெசிடன்சீஸ் வீடமைப்புக் கருத்திட்டம்

கொழும்பு மாவட்டம், மொரட்டுவை நகரப் பிரதேசத்தில் உள்ள லுனாவ தானாயம்வத்த எனும் காணியில் 356 வீட்டு அலகுகளைக் கொண்ட "லுனாவ நகர வீடமைப்புக் கருத்திட்டம்" 2012 ஆம் ஆண்டு நகரக் குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபையினால் அமுல்படுத்தப்பட்டது. இந்த வீடமைப்புக் கருத்திட்டம் 2021 ஏப்ரல் மாதம் 09 ஆம் திகதி மக்களிடம் கையளிக்கப்பட்டது. 410 சதுர அடி, 02 அறைகள், ஹோல், சிறிய சமையலமையை கொண்டதாக வெளிப்புற மொட்டை மாடியுடன் மின்தூக்கி, சமுதாய மண்டபம், பகல்நேர அரவணைப்பு நிலையம், பாலர் பாடசாலை, உள்ளக வீதிகளைக் கொண்ட வாகனத் தரிப்பிடம் போன்ற அத்தியாவசிய அம்சங்களை கொண்டதாக இந்த வீடமைப்புத் தொகுதி நிர்மாணிக்கப்பட்டது.

விற்பனை அடிப்படையில் நீக்கம் செய்யப்பட்ட இக்கருத்திட்டத்தில் நிதிசார் அடிப்படையில் அடையப் பெற்றுள்ள முன்னேற்றம் 2021 ஆம் ஆண்டுடன் ஒப்பிட்டு 2022 ஆம் ஆண்டுக்கு கீழே தரப்பட்டுள்ளது.

கொடுப்பனவு முறையியல்	விற்பனை பெறுமதி				பணம் கிடைத்தல்	
	2021 ஆம் ஆண்டு		2022 ஆம் ஆண்டு		2021 ஆம் ஆண்டு	2022 ஆம் ஆண்டு
	வீட்டு அலகுகளின் எண்ணிக்கை	விற்பனை பெறுமதி (ரூ.மி.)	வீட்டு அலகுகளின் எண்ணிக்கை	விற்பனை பெறுமதி (ரூ.மி.)	நிதிசார் முன்னேற்றம் (ரூ.மி.)	நிதிசார் முன்னேற்றம் (ரூ.மி.)
100%	78	396.36	140	704.46	369.36	664.80
50%	98	499.26	178	912.91	257.59	460.38
25%	110	552.84	13	66.36	141.05	18.74
பதவியணி	11	46.30	22	94.80	1.40	2.50
மொத்தம்	297	1,467.76	353	1,778.53	769.39	1146.32

`

2022 ஆம் ஆண்டில் அமுல்படுத்த திட்டமிடப்பட்ட குறைந்த வருமான வீடமைப்புக் கருத்திட்டங்கள்

துடுவேகொட குறைந்த செலவின நகர்ப்புற வீடமைப்புக் கருத்திட்டம்

துடுவேகொட நகர்ப்புற வீடமைப்புக் கருத்திட்டம் ஹிக்கடுவ பிரதேச செயலாளர் பிரிவின் 59(ஏ) ஹிக்கடுவ நகரம் எனும் கிராம அலுவலர் பிரிவில் குடாகொடவவெலதெனிய எனும் காணியில் நிர்மாணிக்க உத்தேசிக்கப்பட்டிருந்தது. இதில் சுனாமியால் இடம்பெயர்ந்த 32 குடும்பங்களுக்கு 32 வீட்டு அலகுகளைக் கொண்ட குறைந்த வருமான வீடமைப்புக் கருத்திட்டத்தை அமுல்படுத்த நகரக் குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபை திட்டங்களை தயார் செய்திருந்தது. இக்கருத்திட்டத்தின் செலவினமான ரூபா மில்லியன் 158 ஆன தொகை 2022 வரவு செலவுத்திட்டத்தின் மூலம் ஒதுக்கப்பட்டிருந்தது.

இக்கருத்திட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட ஏற்பாடுகள் கிடைக்காமை மற்றும் 2022.04.26 ஆம் திகதிய BD/CBP/01/01/04-2022 ஆம் இலக்க அரச செலவினங்களை கட்டுப்படுத்தல் எனும் தலைப்புடன் வெளியிடப்பட்ட தேசிய வரவு செலவுத்திட்ட சுற்றறிக்கைக்கு அமைய இந்தக் கருத்திட்டம் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டது. இக்கருத்திட்டத்திற்கு 2022.12.31 ஆம் திகதிக்கு கருத்திட்டத்திற்குரிய ஆரம்ப கட்டப் பணிகளை மேற்கொள்ளல் மற்றும் ஆரம்ப அங்கீகாரங்களைப் பெற்றுக் கொள்வதற்கு நகரக் குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் உள்ளக ஏற்பாடுகளிலிருந்து ரூ.மி. 0.94 ஆன தொகை செலவிடப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும், இக்கருத்திட்டத்தை குறைந்த வருமான மற்றும் நடுத்தர வருமானம் ஆகிய இரண்டையும் உள்ளடக்கிய வீடமைப்புக் கருத்திட்டமாக அரச – தனியார் பங்குடைமை பொறிமுறையின் கீழ் அரசுக்கு செலவின சுமையாக இருக்காதவாறு அமுல்படுத்துவதற்கு அமைச்சரவை விஞ்ஞாபனமொன்று சமர்ப்பிக்கப்பட்டு அமைச்சரவையின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டது.

நாவலப்பிட்டி நகர்புற குறைந்த வருமான வீடமைப்புக் கருத்திட்டம்

நாவலப்பிட்டி மேற்கு கிராம அலுவலர் பிரிவுக்கு உரித்தான சொய்சாகெலே தொழிலாளர் வீடமைப்புத் திட்டத்திற்கு உரித்தான காணியில் வீடுகளுக்கான போதியளவு உட்கட்டமைப்பு வசதிகள் இன்றி முறையற்ற வீடுகளில் சுமார் 50 வருடகாலமாக வாழும் நகரத்தில் முறையற்ற தொழில்வாய்ப்புக்களில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களான 83 குடும்பங்களுக்கான குறைந்த வருமான வீடமைப்புக் கருத்திட்டமாக அமுல்படுத்த திட்டமிடப்பட்டிருந்தது.

எவ்வாறாயினும், இக்கருத்திட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட ஏற்பாடுகள் கிடைக்காமை மற்றும் 2022.04.26 ஆம் திகதிய BD/CBP/01/01/04-2022 ஆம் இலக்க அரச செலவினங்களை கட்டுப்படுத்தல் எனும் தலைப்புடன் வெளியிடப்பட்ட தேசிய வரவு செலவுத்திட்ட சுற்றறிக்கைக்கு அமைய இந்தக் கருத்திட்டம் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டது. இக்கருத்திட்டத்திற்கு 2022.12.31 ஆம் திகதிக்கு கருத்திட்டத்திற்குரிய ஆரம்ப கட்டப் பணிகளை மேற்கொள்ளல் மற்றும் ஆரம்ப அங்கீகாரங்களைப் பெற்றுக் கொள்வதற்கு நகரக் குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் உள்ளக ஏற்பாடுகளிலிருந்து ரூ.மி. 1.73 ஆன தொகை செலவிடப்பட்டுள்ளது.

`

2022 ஆம் ஆண்டில் அமுல்படுத்த திட்டமிடப்பட்ட நடுத்தர வருமான வீடமைப்புக் கருத்திட்டங்கள்

வீடமைப்புக் கருத்திட்டம்	கருத்திட்டம் பற்றிய விபரம்		வீட்டு அலகுகளின் எண்ணிக்கை	மதிப்பீட்டுச் செலவினம் (ரூ.மி.)	2022.12.31 ஆம் திகதிக்கு நிதிசார் முன்னேற்றம் (ரூ.மி.)	கருத்திட்டத்தை நிறைவு செய்ய உத்தேசித்துள்ள ஆண்டு
	காணி	2022.12.31 ஆம் திகதிக்கு நிலைமை				
வத்தளை "வெலிசர ஹைட்ஸ் ரெசிடன்சீஸ்" வீடமைப்புக் கருத்திட்டம்	வத்தளை மில்லகஹவத்த காணி (ஹெக்டயர் 2.4532)	காணியின் உரித்து ந.கு.அ.அ.சபைக்கு கிடைத்துள்ளது. முதலீட்டாளர் ஒருவரை தெரிவு செய்து கொள்வதற்காக கருத்திட்டத்துக்கு விருப்பங்களை கோருவதற்கு (EOI) நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.	408	8,873.53	2.06	2025
ஸ்ரீ ஜயவர்த்தனபுர கோட்டே கலப்பு அபிவிருத்தி வீடமைப்புக் கருத்திட்டம்	ஸ்ரீ ஜயவர்த்தனபுர கோட்டே தபால் அலுவலகம் அமைந்துள்ள காணி (ஹெக்டயர் 0.2963)	ஆரம்ப விடுவிப்பு அங்கீகாரங்கள் பெறப்பட்டுள்ளன. காணி தொடர்பில் 'O' கோட்டு வரைபடத்தை தயார் செய்வதற்கு நில அளவையாளர் திணைக்களத்திடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.	160	8,909.62	1.06	2025
நிட்டம்புவ ஒசர்ட்வத்த வீடமைப்புக் கருத்திட்டம்	நிட்டம்புவ ஒசர்ட்வத்த காணி (ஹெக்டயர் 3.6932)	காணியை LRC இடம் கொள்வனவு செய்வதற்கு நகரக் குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் பெயரில் வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ளது. கருத்திட்டத்திற்கு பிரேரணைகளை (RFP) கோரல் மற்றும் கருத்திட்டத்திற்கு விருப்பம் கோரல் (EOI) மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.	130	4447.11	61.97	2024
கடுவளை கலப்பு அபிவிருத்தி வீடமைப்புக் கருத்திட்டம்	கடுவளை தபால் அலுவலகம் அமைந்துள்ள காணி (ஹெக்டயர் 0.2757)	திட்டங்களுக்கான விடுவிப்பு மற்றும் ஆரம்ப அங்கீகாரங்கள் பெறப்பட்டுள்ளன. விலை மதிப்புத் திணைக்களத்திற்கு காணியின் விலை மதிப்பை பெற்றுத் தருமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. காணியை அதிகாரசபைக்கு சாட்டுதல் செய்வதற்கு புதிய திருத்திய வரைபடத்தை தயார் செய்வதற்கு, பிரதேச செயலாளரினால் கோரிக்கையொன்று நில அளவையாளர் திணைக்களத்திடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.	112	3800.00	1.14	2025

`

நகரக் குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் 2022 ஆம் ஆண்டின் செயற்றிட்டத்திற்கு அமைய 2022 ஆம் ஆண்டில் அமுல்படுத்தவென நடுத்தர வருமான நகர்ப்புற சமுதாயத்தினருக்கான 04 வீடமைப்புக் கருத்திட்டங்கள் திட்டமிடப்பட்டிருந்தன. இக்கருத்திட்டங்கள் 4 உம் அரச தனியார் பங்கேட்பு முறையியல் ஊடாக மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டிருந்தன. அவையாவன, வத்தளை, ஸ்ரீ ஜயவர்த்தனபுர, நிட்டம்புவ மற்றும் கடுவளை ஆகிய வீடமைப்புக் கருத்திட்டங்களாகும்.
இதன் போது 2022 ஆம் ஆண்டில் இக்கருத்திட்டங்களுக்கான ஆரம்ப அங்கீகாரங்களைப் பெற்றுக் கொள்ளும் நடவடிக்கைகள், காணிகளை சாட்டுதல் செய்துகொள்ளும் நடவடிக்கைகள் மற்றும் கருத்திட்டங்களை நிர்மாணிக்கும் பணிகளை ஆரம்பிப்பதற்கான ஆரம்ப கட்டப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. இந்த ஆண்டில் நிலவிய பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் நாட்டில் சகல நிர்மாணப் பணிகளும் பாதிக்கப்பட்டதுடன் எமது கருத்திட்டங்களுக்கும் கருத்திட்ட அபிவிருத்தியாளர் ஒருவர் அல்லது முதலீட்டாளர் ஒருவரை தேடிப் பெற்றுக் கொள்வது கடினமாக இருந்தது. 2022.12.31அழ் திகதிக்கு மேற்படி 4 கருத்திட்டங்களிலும் அடையப் பெற்றுள்ள முன்னேற்றம் பற்றிய தகவல்கள் மேலே அட்டவணையில் தரப்பட்டுள்ளது.

2022 ஆம் ஆண்டு அமுல்படுத்தப்பட்ட வேறு பௌதீக அபிவிருத்திக் கருத்திட்டங்கள்

சமுதாய கருத்திட்டங்கள் : சிறி விமலசிறி முன்பிள்ளைப் பருவ அபிவிருத்தி நிலையத்தை நிர்மாணித்தல்.

நகரக் குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் சமூக திரட்டல் பிரிவின் நிபுண சவிய நிகழ்ச்சித்திட்டம் தொடர்பிலான நிதி ஏற்பாடுகளின் கீழ் ஹம்பாந்தோட்டை மாவட்டத்தின் அங்குனகொலபெலெஸ்ஸ பிரதேச செயலாளர் பிரிவின் உடயால கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த மக்களின் கோரிக்கைக்கு அமைய கஸாகல ஸ்ரீ விமலசிறி முன் பிள்ளைப் பருவ அபிவிருத்தி நிலையத்தை நிர்மாணிக்க உத்தேசிக்கப்பட்டது. ரூ.மி. 4.5 ஆன செலவில் மேற்கொள்ளப்பட்ட மேற்படி கருத்திட்டம் 2022.01.07 ஆம் திகதி திறந்துவைக்கப்பட்டது.



தொடர்ச்சியான கருத்திட்டங்கள் : அங்குலான வீடமைப்புக் கருத்திட்டம்

நகரக் குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் குறைந்த வருமான வீடமைப்புக் கருத்திட்டமான அங்குலான வீடமைப்புக் கருத்திட்டத்தில் 04 மாடிகளின் யன்னல்களுக்கு வலை பொருத்தல் மற்றும் மதிலை சுற்றி கொன்க்றீட் சுவர் நிர்மாணிக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. அதற்காக ரூ.மி. 4.3 ஆன தொகை செலவிடப்பட்டது.

`

பூர்த்தி செய்யப்பட்ட கருத்திட்டங்களின் பயனாளிகளுக்கு வீட்டு உரித்து மற்றும் உறுதிகளை பெற்றுக் கொடுத்தல்


பொரளை சஹஸ்புர தொடர்மாடி வீடமைப்புக் கருத்திட்டத்தின் பயனாளிகளுக்கு உறுதிகளைப் பெற்றுக் கொடுத்தல்.

பொரளை சஹஸ்புர வீடமைப்புக் கருத்திட்டம், நகரக் குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் முன்பு காணப்பட்ட நிறுவனமான ரியல் எஸ்டேட் எக்ஸ்சேன்ஜ் (பிரைவட்) லிமிடடினால் 'திரசர புரவர' நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் கொழும்பு மாநகர சபை வலயத்திற்குள் குறைந்த வசதிகளுக்கு மத்தியில் வாழும் குடும்பங்களை இலக்காகக் கொண்டு நிர்மாணிக்கப்பட்ட தொடர்மாடி வீடமைப்புத்திட்டமாகும். இதில் 329 வீட்டு அலகுகள் நகரக் குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் கீழ் காணப்படுகின்றன. மேற்படி வீட்டு அலகுகளில் கொடுப்பனவுகள் செலுத்தி முடிக்கப்பட்டுள்ள பயனாளிகள் 23 பேருக்கு உறுதிகள் வழங்குவது 2022 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அங்குலான 'சயுரபுர' தொடர்மாடி வீடமைப்புக் கருத்திட்டத்தின் இலவச கொடைகளின் பேரில் நீக்கம் செய்யப்பட்ட வீடுகளுக்கு உடன்படிக்கை செய்துகோள்ளல்.

01/2021 ஆவது பணிப்பாளர் சபை தீர்மானத்திற்கு அமைய இலவச கொடையாக வழங்கப்பட்ட மொரட்டுவ அங்குலான 'சயுரபுர' வீடமைப்புத் திட்டத்தின் பயனாளிகள் 15 பேருக்கு வீடுகளுக்காக ரூபா 1,500,000/- ஆன தொகையை செலுத்த இணங்கி 2022 ஆம் ஆண்டு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டது. கொடுப்பனவுகள் செலுத்தி முடிக்கப்பட்ட பின்னர் மேற்படி பயனாளிகளுக்கு எதிர்காலத்தில் வீட்டு உறுதிகள் வழங்கப்படவுள்ளன.

மனித அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம்







`

“சுய சக்தி – மனித அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் 2022”

2022 ஆம் ஆண்டிலும் மனித அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் குறைந்த வருமானம் பெறும் நகர்ப்புற சமுதாயத்தினரை ஆக்கபூர்வமான பங்கேட்கச் செய்துகொண்டு மற்றும் அவர்களை அதற்கு ஊக்குவித்து வெற்றிரகமாக அமுல்படுத்தப்பட்டதுடன், இதன் போது ஒவ்வொரு நிகழ்ச்சித்திட்டத்தையும் சில உப நிகழ்ச்சித்திட்டங்களில் உள்ளடக்கியதாக அதில் பிரதான நிகழ்ச்சித்திட்டத்தின் நோக்கங்களை அடைந்துகொள்வதற்காக அமுல்படுத்தப்பட்டது. இப்பணிகளை வெற்றிகரமாக்கிக் கொள்வதற்கு அரச நிறுவனங்கள், தனியார்துறை நிறுவனங்கள் மற்றும் சிவில் சமுதாயத்தினர் பங்களிப்பு வழங்கியதுடன், அவர்களுக்கு நன்றி தெரிவித்தல் வேண்டும்.
கொவிட் 19 தொற்று நோய் பரவல் அதிகரித்தமை மற்றும் இன்று காணப்படுகின்ற பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் நகரக் குடியிருப்புக்களை சேர்ந்த சமுதாயத்தினரின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்காக நகரக் குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபையினால் பெரும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. நாடளாவிய ரீதியில் 11 மாவட்டங்களில் நகரக் குடியிருப்புக்கள் 23 இல் 5706 வீட்டு அலகுகளில் வாழும் 7619 குடும்பங்களின் சமூக – பொருளாதார நிலைமையை மேம்படுத்துவதற்காக 2022 ஆம் ஆண்டில் ‘சுயசக்தி’ மனித அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களின் கீழ் மேற்கொள்ளப்பட்டன.

இலக்கு – 1
சௌபாக்யா பிரஜா சக்தி - சமூக ரீதியாக சமுதாயத்தை வலுவூட்டல்

சௌபாக்யா பிரஜா சக்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் குறைந்த வருமானம் பெறுவோருக்கு மத்தியில் சமுதாய அடிப்படையிலான அமைப்புக்களை உருவாக்கி கலாசார ரீதியான பல்லினத்தன்மையை புரிந்துகொண்டு சமுதாயத்தை தனித்தனியாக மற்றும் கூட்டாக சமூக ரீதியில் வலுவூட்டுவது மேற்கொள்ளப்படுகின்றது.

வெற்றிக்கான உதாரணம் 1:

காலி போகஹவத்த குடியிருப்பில் சிறு குழு சேமிப்பு நிகழ்ச்சித்திட்டம் மிக்க வெற்றிகரமான நிகழ்ச்சித்திட்டமாகும். இதில் 02 குழுக்கள் காணப்படுவதுடன், மேற்படி இரண்டு குழுக்களினதும் சேமிப்பு ரூபா 111,825.00 ஆக வளர்ச்சியடைந்துள்ளது. மினிமுத்து குழு ரூபா 20,000.00 மற்றும் ரூபா 10,000.00 ஆக உறுப்பினர்கள் இருவருக்கு 2% ஆன வட்டிக்கு கடன் வழங்கியுள்ளதுடன், தனிநபர் சேமிப்பு ரூபா 5,000.00 முதல் ரூபா 9,000.00 வரையானதாக காணப்படுகின்றது. எக்கமுத்து குழு ரூபா 10,000.00 வீதம் 3 பேருக்கு ரூபா 5,000.00 வீதம் 2 பேருக்கு மற்றும் ரூபா 2,500.00 வீதம் ஒருவருக்கு 4% ஆன வட்டிக்கு கடன் வழங்கியுள்ளது. இதன் போது தனிநபர் சேமிப்பு ரூபா 4,000.00 ஆன மட்டத்தில் காணப்படுகின்றது. ஒவ்வொரு குழுவும் உறுப்பினர்கள் 10 பேரைக் கொண்டுள்ளது.

பிரஜா சக்தி நிகழ்ச்சித்திட்டத்தை அமுல்படுத்தியதன் மூலம் பெற்றுக் கொண்ட பெறுபேறுகள்

- தெரிவு செய்யப்பட்ட 23 குடியிருப்புக்களில் சமூக பொருளாதார நிலைமை பற்றய 23 ஆய்வுகள் நடாத்தப்பட்டு தகவல்கள் திரட்டப்பட்டன.
- 23 குடியிருப்புக்களில் தாபிக்கப்பட்ட சமுதாய அடிப்படையிலான அமைப்புக்களின் செயற்பாடுகளை வலுவூட்டுவதற்கான தொழில்நுட்ப உதவி மற்றும் உபகரணங்களும் வழங்கிவைக்கப்பட்டன.
- போதைவஸ்து, மதுபானம் மற்றும் வேறு போதைக்காக பயன்படுத்தப்படும் அம்சங்கள் பற்றி அறிவுறுத்தல் மற்றும் தடுப்பது பற்றி ஆட்கள் 824 பேருக்காக 12 நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டன.
- கொழும்பு மற்றும் கம்பஹா மாவட்டங்களில் சுகாதார மருத்துவ அலுவலர் அலுவலகங்களை தொடர்புபடுத்திக் கொண்டு சமுதாய சுகாதார மேம்பாட்டு நிகழ்ச்சித்திட்டங்கள் 06 நடாத்தப்பட்டதுடன், அதில் சமுதாயத்தினர் 506 பேர் இணைந்துகொண்டார்கள்.
- கொழும்பு, கம்பஹா மற்றும் மாத்தளை ஆகிய மாவட்டங்களில் குடியிருப்புக்களில் சிறுவர்கள், இளைஞர்கள் மற்றும் முதியவர்கள் 264 பேருக்கு பல் சிகிச்சை சாய்சாலைகள் 04 நடாத்தப்பட்டன.
- கம்பஹ மற்றும் பொலன்னறுவை ஆகிய மாவட்டங்களில் இரத்ததான நிகழ்ச்சித்திட்டங்கள் 02 நடாத்தப்பட்டன.
- சமுதாயத்தினரின் பங்கேட்புடன் குடியிருப்புக்களில் 12 சிரமதானங்கள் நடாத்தப்பட்டன.
- கம்பஹா மாவட்ட குடியிருப்புக்களில் 301 குடும்பங்களுக்கு வீட்டுப் பயிர் செய்கை நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் மரக்கறி மற்றும் விதைகள் வழங்கியமை.
- கம்பஹா, பொலன்னறுவை, திருகோணமலை, கொழும்பு, காலி, குருநாகல் மற்றும் ஹம்பாந்தோட்டை ஆகிய மாவட்டங்களுக்கு 1301 குடும்பங்களுக்கு 2715 தென்னங் கன்றுகள் வழங்கப்பட்டன.



SP 1.1: 23 குடியிருப்புக்களில் தேவைகளை இனங்காணல்



SP 1.2: சமுதாய அடிப்படையிலான அமைப்புக்களின் நிலைபேறான செயற்பாட்டுக்கு சமுதாய அடிப்படையிலான அமைப்புக்களை வலுவூட்டல்



SP 1.3: போதை வஸ்து, போதை வஸ்து முறையற்ற பயன்பாட்டை தடுத்தல் மற்றும் புனர்வாழ்வளித்தல்



SP 1.4: சமுதாய சுகாதார மேம்பாட்டு நிகழ்ச்சித்திட்டம்



SP 1.5: நிலைபேறான சுற்றாடல் மேம்பாட்டு நிகழ்ச்சித்திட்டம்

இலக்கு – 2

சௌபாக்யா சவிபல – சமுதாயத்தை பொருளாதார ரீதியாக வலுவூட்டும் நிகழ்ச்சித்திட்டம்

குறைந்த வசதிகளைக் கொண்டுள்ள குடியிருப்புக்களில் காணப்படுகின்ற சிறு தொழில்முயற்சிகளை மேம்படுத்தல் மற்றும் புதிய வியாபாரங்களை ஆரம்பிக்க சிறு தொழில்முயற்சி அபிவிருத்தி பிரிவின் உதவியுடன் நகரக் குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபையினால் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் ஊடாக தேவையான வழிகாட்டல்கள் பெற்றுக் கொடுக்கப்பட்டன.

வெற்றியின் உதாரணம் 2 :

சுய தொழில்வாய்ப்பு மற்றும் தொழில்முயற்சிசார் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் மூலம் வீட்டு மட்டத்தில் சவர்க்காரம் உற்பத்தி செய்வது அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. இதன் போது கம்பஹா மாவட்டத்தின் மினுவங்கொட, கொரச குடியிருப்பில் திருமதி கீதா தமயந்தி சவர்க்காரம் உற்பத்தியை 8 துண்டுகளுடன் ஆரம்பித்துள்ளார் என்பதுடன், ஒரு வாரத்திற்கு 50 சவர்க்காரங்களை உற்பத்தி செய்கின்றார். ஒரு சவர்க்காரத்தின் நிறை 100 கிறாம் ஆகும். இது ரூபா 90.00 இற்கு விற்பனை செய்யப்படுவதுடன், ரூபா 4500.00 ஆன வருமானத்தை உழைக்கின்றார். ஒரு வாரத்தின் தேறிய இலாபம் ரூபா 1750 ஆகும்.

சௌபாக்யா சவிபல நிகழ்ச்சித்திட்டத்தை அமுல்படுத்தியதன் மூலம் பெற்றுக் கொண்ட பெறுபேறு

- 2022 ஆம் ஆண்டில் குடியிருப்புக்களிலிருந்து தொழில்முயற்சியாளர்கள் 447 பேர் இனங்காணப்பட்டுள்ளார்கள்.
- தொழில்முயற்சி ஊடாக நகரக் குறைந்த வசதிகளைக் கொண்ட குடியிருப்புக்களில் வாழும் சமுதாயத்தினர் மத்தியில் நுண் / சிறிய அளவிலான தொழில்முயற்சியாளர்களின் ஆற்றல்களை மேம்படுத்துவதற்காக 38 செயலமர்வுகள் நடாத்தப்பட்டன.
- நுண் / சிறிய அளவிலான தொழில்முயற்சியாளர்கள் 26 பேருக்கு சந்தை வாய்ப்புக்கள் உருவாக்கிக் கொடுக்கப்பட்டன.
- நுண், சிறு மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சிகளுக்கு மென்மேலும் சிறந்த சந்தைவாய்ப்பைப் பெற்றுக் கொடுப்பதற்காக தமது உற்பத்திகளை காட்சிப்படுத்துவதற்கு உணவு மற்றும் சந்தைக் கண்காட்சிகள் 10 நடாத்தப்பட்டதுடன், இவற்றில் தொழில்முயற்சியாளர்கள் 113 பேர் பங்கேற்றார்கள்.





SS 2.1: சிறிய அளவிலான தொழில்முயற்சியாளர்களுக்கு விழிப்புணர்வூட்டும் செலமர்வுகளை நடாத்தியமை



SS 2.3 : சிறிய அளவிலான தொழில்முயற்சியாளர்களுக்கு சந்தை வாய்ப்புக்களை அறிமுகம் செய்தல்



SS 2.2: சிறிய அளவிலான தொழில்முயற்சியாளர்களுக்கு நிதி மற்றும் உபகரணம் வழங்குதல்

இலக்கு – 3

சௌபாக்யா நெனபல – கல்விசார் ரீதியாக வலுவூட்டும் நிகழ்ச்சித்திட்டம்

நகரக் குடியிருப்புக்களில் வாழும் சமுதாயத்தினருக்கு அபிவிருத்தி செயன்முறையில் பங்கேற்கத் தேவையான வழிகாட்டல் மற்றும் ஊக்குவிப்பை நகரக் குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபை பெற்றுக் கொடுப்பதன் மூலம் 2022 ஆம் ஆண்டில் தெரிவு செய்யப்பட்ட பிரதேசங்களின் இளைஞர் கழகங்கள் மற்றும் சிறுவர் கழகங்களைத் தாபிக்கவும் எமது அதிகாரசபை உதவி வழங்கியுள்ளது. மேலும் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையுடன் இணைந்து 30 குடியிருப்புக்களைச் சேர்ந்த சிறுவர்கள் மற்றும் பெற்றோர் 1496 பேருக்கு சிறுவர் உரிமைகள் மற்றும் பாதுகாப்பு, சிறுவர் துஷ்பிரயோகம், துஷ்பிரயோகத்தை தடுத்தல் பற்றி விழிப்புணர்வூட்டும் நிகழச்சித்திட்டங்களும் நடாத்தப்பட்டன. கட்டிளமைப் பருவ யுவதிகளுக்கு மாதவிடாய் மற்றும் கர்ப்பமடைதல் பற்றிய சுகாதார நிகழ்ச்சித்திட்டங்களும் இலங்கை குடும்ப சுகாதார பணியகத்தின் ஒத்துழைப்புடன் சிறுவர்கள் 14 பேருக்கு நடாத்தப்பட்டது.

`

நகரக் குடியிருப்புக்களில் பாடசாலைகளிலிருந்து வெளியேறியுள்ள மற்றும் பாடசாலை கல்வியை நிறைவு செய்துள்ள 16 வயதுக்கு மேற்பட்ட இளைஞர் யுவதிகளின் ஆங்கில மொழி தொடர்பான மென்திறன்களை விருத்தி செய்யும் நோக்கத்துடன் ஆங்கில மொழிப் பாடநெறியொன்று ஆரம்பிக்கப்பட்டு அமுல்படுத்தப்பட்டது. திறன்களை அபிவிருத்தி செய்வதன் மூலம் அவர்களின் எதிர்காலத்தை திட்டமிடுவதற்கு மற்றும் அபிவிருத்தி செயன்முறைக்கு உதவும். அவர்களின் தொடர்பாடல், தனிநபர் அபிவிருத்தி மற்றும் தொழில் வாய்ப்புக்களுக்கு சிறந்த அங்கீகாரம் கிடைப்பதை இதன் பயன்களாகக் குறிப்பிட முடியும்.

சௌபாக்யா நெனபல நிகழ்ச்சித்திட்டத்தை அமுல்படுத்தியன் மூலம் பெற்றுக் கொண்ட பெறுபேறு

- மும்மாத ஆங்கில பயிற்சி பாடநெறியை பூர்த்தி செய்த இளைஞர் யுவதிகள் 50 பேருக்கு சான்றிதழ்களை வழங்கிவைத்தமை.
- சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையுடன் இணைந்து சிறுவர் உரிமைகள் மற்றும் பாதுகாப்பு, சிறுவர் துஷ்பிரயோகம், துஷ்பிரயோகத்தை தடுத்தல் பற்றி விழிப்புணர்வூட்டும் 30 நிகழ்ச்சித்திட்டங்கள் சிறுவர்கள் மற்றும் பெற்றோர் 1496 பேருக்காக நடாத்தபபட்டமை.
- சிறுவர்களின் அறிவை வளர்க்கும் நோக்கத்துடன் கொலன்னாவ வடுகொடவத்த குடியிருப்பில் நூலகமொன்றை ஆரம்பிக்க புத்தகங்கள் வழங்கப்பட்டமை.
- ஆரம்பக் கல்வியை தொடர்ச்சியாக பேணிவருவதை ஊக்குவிப்பதற்காக சிறுவர்கள் 100 பேருக்கு அத்தியாவசிய பாடசாலை உபகரணம் / எழுதுகருவிகள் பெற்றுக் கொடுக்கப்பட்டன.
- கொவிட் 19 தொற்று நோய்க் காலத்தில் அன்றாடம் பாடசாலை பாடங்களுக்கு உதவுவதற்கான ஒன்லையின் செயலமர்வுகள் 10 நடாத்தப்பட்டன.
- 5 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சைக்கு தோற்றிய பிள்ளைகள் 101 பேருக்கு பாடசாலை உபகரணம் வழங்கப்பட்டமை.
- கம்பஹா மாவட்டத்தில் 02 குடியிருப்புக்களில் சிறுவர் சேமிப்பை மேம்படுத்துவதற்காக சிறுவர்கள் 71 பேருக்கு கணக்குகளை ஆரம்பித்தமை.
- சிறுவர் சங்கங்கள் 22 ஆரம்பிக்கப்பட்டமை.



SN 3.1 : இளைஞர்கள் மற்றும் சிறுவர் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தை அமுல்படுத்தல்



SN 3.2 : திறன் அபிவிருத்தி மற்றும் தொழில் பயிற்சி பற்றிய செயலமர்வை நடாத்தல்

`

இலக்கு 4 –

சௌபாய்கா திவிவருன – சமய மற்றும் கலாசார வலுவூட்டல் நிகழ்ச்சித்திட்டம்

2022 ஆம் ஆண்டு நகரக் குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபையினால் பல்வேறு சமுதாயத்தினருக்கும் மத்தியில் சமூக சகவாழ்வை மேம்படுத்துவதற்காக பல்கலாசார மற்றும் பல்சமய செயற்பாடுகளை ஒழுங்கு செய்ய வசதிகள் செய்துகொடுக்கப்பட்டு நகரக் குறைந்த வசதிகளைக் கொண்ட சமுதாயத்தினருக்கு இடையே பல்சமய மற்றும் பல்கலாசார நிகழ்ச்சித்திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டன.

இலங்கையில் அமைந்துள்ள உலக சுகாதார ஸ்தாபத்தின் ஒத்துழைப்புடன் நகரக் குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் பதவியணியினர் 40 பேருக்கு 02 நாள் பயிற்சி நடாத்தப்பட்டது.

சௌபாய்கா திவிவருன நிகழ்ச்சித்திட்டத்தை அமுல்படுத்தியன் மூலம் பெற்றுக் கொண்ட பெறுபேறு

- சமுதாயங்களுக்கு இடையே இனங்களுக்கு இடையிலான ஒற்றுமையை போசிப்பதற்காக 1941 குடும்பங்களின் பங்கேற்புடன் பல்சமய நிகழ்ச்சித்திட்டங்கள் 08 நடாத்தப்பட்டன.
- ஆக்கபூர்வமானதன்மை மற்றும் அழகியற்கலை திறமைகளை மேம்படுத்தல் மற்றும் ஊக்குவிப்பதற்கு ஆட்கள் 615 பேரின் பங்கேற்புடன் பல்கலாசார நிகழ்ச்சித்திட்டங்கள் 13 நடாத்தப்பட்டன.
- நகரக் குறைந்த வசதிகளைக் கொண்ட குடியிருப்புக்களில் வாழும் குறைந்த வருமானம் பெறும் 45 பேருக்கு உலக சுகாதார அமைப்பின் இலங்கையிலுள்ள நிறுவனத்தின் ஒத்துழைப்புடன் உளவியல் - சமூக சுகாதார பாதுகாப்பு அறிவுடன் உளவியல் சுகாதார உதவி நிகழ்ச்சித்திட்டங்கள் 10 நடாத்தப்பட்டன.



SD 4.1 : பல்சமய மற்றும் கலாசார செயற்பாடுகளைக் கொண்ட நிகழ்ச்சித்திட்டம்





SD 4.2: கலாசார, இலக்கிய மற்றும் கலை மேம்பாட்டு நிகழ்ச்சித்திட்டங்கள் (இலக்கியம், நாடகம், இசை மற்றும் நடனக் கலை)

`

இலக்கு – 5

2022 உலகக் குடியிருப்புத் தின நிகழ்ச்சித்திட்டம்

உலகக் குடியிருப்புத் தினம் ஒவ்வொரு வருடமும் அக்டோபர் மாதம் முதலாவது திங்கட்கிழமை கொண்டாடப்படுகின்றது. இந்த சந்தர்ப்பமானது மனிதக் குடியிருப்புக்களின் நிலைமை மற்றும் அதில் வாழும் மக்களுக்குப் போதியளவு இருப்பிட வசதிகளுக்கு சகலருக்கும் உள்ள உரிமை பற்றி பிரதானமாக கவனம் செலுத்துகின்றது. இந்த ஆண்டில் உலகக் குடியிருப்புத் தினம் 2022 அக்டோபர் மாதம் 3 ஆம் திகதி திங்கட்கிழமை கொண்டாடப்பட்டது. நகரக் குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபை நாடு முழுவதிலும் 25 மாவட்டங்களிலும் நகர, குறைந்த வசதிகள் கொண்ட சமுதாயத்தினரை மையமாகக் கொண்டு **"பாரபட்சம் காட்டாதிருப்போம். எவரையும், எந்த இடத்தையும் கைவிடாது பாதுகாப்போம்"** எனும் தொணிப்பொருளை மையமாகக் கொண்ட இம்முறை உலகக் குடியிருப்புத் தின செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன.

2022 உலகக் குடியிருப்பு தினத்தை முன்னிட்டு நான்கு பிரிவுகளின் கீழ் போட்டிகள் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தன.

1. சிறுவர் சித்திரப் போட்டி (வயது 6-9, வயது 10-14, வயது 15-18 ஆகிய 3 பிரிவுகள்)
2. நுண், சிறிய, நடுத்தர அளவிலான தொழில்முயற்சியாளர்களுக்கான வர்த்தகக் கண்காட்சி
3. குறுந் திரைப்படப் போட்டி
4. நகர்ப்புற வீட்டுத் தோட்டப் பயிர்செய்கை போட்டி

வெற்றிக்கான உதாரணம் : 3



கம்பஹா மாவட்டத்தின் மஹர – கல்வத்த குடியிருப்பிலுள்ள சிறுவர்களின் மறைந்துள்ள நடனத் திறமைகளை வெளிக் கொண்டுவருவதற்காக 2022 ஆம் ஆண்டு உலகக் குடியிருப்புத் தின
வைபவத்தின் மேடையில் வாய்ப்பளிக்கப்பட்டது.

2022 உலகக் குடியிருப்புத் தின நிகழ்ச்சித்திட்டத்தை அமுல்படுத்தியதன் மூலம் பெற்றுக் கொண்ட பெறுபேறுகள்

- 2022 ஆம் ஆண்டு சிறுவர் சித்திரப் போட்டிக்கு 1200 ஆக்கங்கள் கிடைத்தன.
- கலைசார் திறமைகளை மென்மேலும் ஊக்குவிப்பதற்காக ஒவ்வொரு பிரிவிலிருந்தும் வெற்றியாளர்கள் 21 பேர் தெரிவு செய்யப்பட்டார்கள்.
- உணவு மற்றும் வர்த்தக கண்காட்சியில் நுண், சிறிய அளவிலான தொழில்முயற்சியாளர்கள் 52 பேர் கலந்துகொண்டார்கள்.
- உணவு மற்றும் வர்த்தக தொகுதிகளில் நுண், சிறிய, நடுத்தர அளவிலான தொழில்முயற்சியாளர்கள் 06 பேர் வெற்றியாளர்களாக தெரிவு செய்யப்பட்டு பணப் பரிசும் வழங்கிவைக்கப்பட்டது.
- குறுந் திரைப்படப் போட்டியின் வெற்றியீட்டிய 03 பேருக்கு பரிசுகள் வழங்கிவைக்கப்பட்டன.
- வீட்டுத் தோட்டப் பயிர் செய்கை போட்டியில் வெற்றியீட்டிய 03 பேருக்கு பரிசுகள் வழங்கிவைக்கப்பட்டன.








`

நகரக் குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் உள்ளக உழைப்புக்கள் (அறவீடுகள்) முன்னேற்றம் - 2022

நகரக் குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் கீழ் காணப்படுகின்ற பூர்த்தி செய்யப்பட்ட வீடமைப்புக் கருத்திட்டங்களின் 10 இன் வீட்டு உரிமையாளர்களான பயனாளிகளிடமிருந்து வீட்டு உரித்தைப்
பெற்றுக் கொடுக்கு போது நிலுவை கடன் தொகை மற்றும் வீடமைப்புக் கடன் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் கடன் பெற்றுக் கொண்ட பயனாளிகளிடமிருந்து மேற்படி கடனை தவணை அடிப்படையில் அறவிட்டுக் கொள்வது எமது அதிகாரசபையின் அறவீட்டுப் பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றது.
இதன் போது வீட்டு உரிமையாளர்கள் மீள்வீடமைப்புமயமாக்கல், மீள் வீடமைப்புமயமாக்கல் அல்லாத, விற்பனை மற்றும் வாடகை அடிப்படையில் வீடுகளைப் பெற்றுக் கொண்டுள்ளார்கள். 2022 ஆம் ஆண்டுக்கான மேற்படி அறவீடுகள் பற்றிய முன்னேற்றம் 2021 ஆம் ஆண்டுடன் ஒப்பிட்டு கீழே படத்தில் தரப்பட்டுள்ளது.



மேலே உள்ள படத்திற்கு அமைய 2022 ஆம் ஆண்டில் அதிகாரசபையின் அறவீட்டு வருமானம் ரூபா மில்லியன் 14.2 ஐ விஞ்சியுள்ளதுடன், இது கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் 38% ஆன அதிகரிப்பாகும்.

`

மனிதவள அபிவிருத்தி மற்றும் நிறுவன முகாமைத்துவ நடவடிக்கைகள்

2022 ஆம் ஆண்டு நிறுவனத்தின் ஊழியர்களின் செயலாற்றுகையை மேம்படுத்துவதற்காக அமுல்படுத்தப்பட்ட பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள்

ஊழியர்களின் வினைத்திறன் மற்றும் விளைதிறனை மேம்படுத்துவதற்கான பல்வேறு பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டன. அவற்றின் விபரம் கீழே அட்டவணையில் தரப்பட்டுள்ளது.

தொடர் இல.	பயிற்சி நிகழ்ச்சித்திட்டம்	பயிற்சி வழங்கிய நிறுவனம்	செலவினம்
1	"UDA" Building Regulation	நகர அபிவிருத்தி அதிகாரசபை	55,000.00
2	அரச வாகனங்கள் பற்றிய பயிற்சி நிகழ்ச்சித்திட்டம்	தேசிய ஊழியக் கற்கை நிறுவகம்	15,000.00
3	Positive Thinking පුහුණු වැඩසටහන	வளவாளர் ஒருவரின் பங்களிப்பு மூலம்	57,673.00
4	"CIDA" Formula Method for Adjustment to Contract Price due to Flection in Price"	நிர்மாண தொழில் அபிவிருத்தி அதிகாரசபை	16,000.00
5	லீவு பொறுப்பு அலுவலரின் செயற்பணி	தேசிய ஊழியக் கற்கை நிறுவகம்	10,000.00
6	இழப்பீடு நட்டம் மற்றும் நி.பி. 104 இன் கீழ் பரிசோதனை	தேசிய ஊழியக் கற்கை நிறுவகம்	10,000.00
7	ஆவணக்கோப்பிடல்	தேசிய ஊழியக் கற்கை நிறுவகம்	135,000.00
8	Bid Evaluation & Reporting	திறன் அபிவிருத்தி நிதியம்	81,000.00
9	பொருட் கணிப்பீடு	தேசிய ஊழியக் கற்கை நிறுவகம்	70000.00
10	One day Seminar on Legal Aspects on Construction Contracts Management and Administration	நிர்மாண தொழில் அபிவிருத்தி அதிகாரசபை	20,000.00
11	Online Seminar on Essentials for Effective Contract Administration, Performance Management and Supervision Infrastructure Projects	நிர்மாண தொழில் அபிவிருத்தி அதிகாரசபை	7,000.00
மொத்த செலவினம்			476,673.00

நிறுவனத்தின் சகல ஊழியர்களினதும் உளவியல் சுகாதாரத்தை மேம்படுத்துவதற்காக சாதகமான மனப்பாங்கு மற்றும் ரசணை பற்றிய நிகழ்ச்சித்திட்டமொன்று வளவாளர் ஒருவர் ஊடாக நடாத்தப்பட்டது. மேலும், பௌர்ணமி தினங்களில் மாதாந்தம் தர்மப் போதனை நிகழ்ச்சித்திட்டமொன்றும் அமுல்படுத்தப்பட்டது.

`











2022 ஆம் ஆண்டுக்கு பயிற்சி வாய்ப்புக்களைப் பெற்றுக் கொடுத்தல்.

பொது நிருவாக சுற்றறிக்கை இலக்கம் 04/2017 இற்கமைய ஒட்டுமொத்த பதவியணியில் ஆனொருக்கு பயிற்சி வாய்ப்புக்களைப் பெற்றுக் கொடுக்க முடியும். அதற்கமைய, ஒரு பயிலுனருக்கு உச்சளவாக 06 மாதங்கள் எனும் வரையறைக்கு உட்பட்டு நாளாந்தம் ரூபா 500.00 ஆன கொடுப்பனவைச் செலுத்தி 2022 ஆம் ஆண்டில் பயிலுனர்கள் 28 பேருக்கு பயிற்சி வாய்ப்புக்கள் பெற்றுக் கொடுக்கப்பட்டன. அதற்காக அதிகாரசபை தாங்கிக் கொண்டுள்ள செலவினம் ரூபா 991,000/= ஆகும்.

2022 ஆம் ஆண்டில் அதிகாரசபையினால் உயர் கல்வி பெறும் மாணவர்களுக்கு வழங்கப்பட்ட பயிற்சி வாய்ப்புக்கள் பற்றிய விபரம் கீழே தரப்பட்டுள்ளது.

தொடர் இல.	பயிற்சிக்காக அனுப்பிவைத்த நிறுவனம்	அனுப்பப்பட்ட பயிற்சி பெற்ற மாணவர்களின் எண்ணிக்கை	2022 ஆம் ஆண்டில் செலுத்தப்பட்ட பயிற்சிக் கொடுப்பனவு (ரூ.)
01	தேசிய சமூக அபிவிருத்தி நிறுவகம்	04	991,000.00
02	களனி பல்கலைக் கழகம் - வெளிவாரி பட்டப் படிப்பு மாணவி	01	
03	கொலன்னாவை தொழில் பயிற்சி நிலையம்	17	
04	மொரட்டுவை பல்கலைக் கழகம் - உள்ள பட்டப் படிப்பு மாணவன்	05	
05	தகவல் தொழில்நுட்ப மற்றும் தொலைக் கல்வி நிறுவகம்	01	

`

நகரக் குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் 2022.12.31 ஆம் திகதிக்கு பதவியணி

#	சம்பள வகுதி	அங்கீகரிக்கப்பட்ட எண்ணிக்கை		தற்போதுள்ள எண்ணிக்கை		வெற்றிடம்	மிகை
		நிரந்தர	ஒப்பந்த	நிரந்தர	ஒப்பந்த		
01	HM2-1	01	-	01	-	-	-
02	HM1-1	04	-	03	-	01	-
03	MM1-1	12	-	10	-	02	-
04	JM1-1	03	-	02	-	01	-
05	MA5-1	14	-	14	-	-	-
06	MA3	31	-	20	-	11	-
07	MA2-1	15	-	12	-	03	-
08	MA1-1	49	-	46	-	03	-
09	PL3	10	-	09	-	01	-
10	PL1	14	-	09	-	05	-
11	ஒப்பந்த	-	-	-	-	-	01
	மொத்தம்	**153**	**0**	**126**	**0**	**27**	**01**
உத்தேச நடுத்தர வருமான வீடமைப்புக் கருத்திட்டத்திற்கு							
12	ஒப்பந்த	-	13	-	03	10	-
	மொத்தம்	**-**	**13**	**-**	**03**	**10**	**-**
	முழுமொத்தம்	**153**	**13**	**126**	**03**	**37**	**01**

- மொத்த நிரந்தர பதவியணி = 126 (தவிசாளர் இன்றி)

நகரக் குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபை
2022.12.31 ஆம் திகதியில் இருந்தவாறு
நிதி நிலைமைக் கூற்று

	விபரம்	தற்போதைய மீதி (ரூ.)	முன்னைய ஆண்டு மீதி (ரூ.)
சொத்துக்கள்			
நடைமுறைச் சொத்துக்கள்			
காசு மற்றும் வங்கி மீதி		60,162,796.92	56,179,922.48
காசு முற்பணம்		8,872.00	322,086.32
உற்சவ முற்பணம்		31,250.00	33,750.00
ஊழியர் கடன்		303,056.72	1,935,848.55
எரிபொருள் முற்பணம்		354,980.00	354,980.00
ஊழியர் இடர் கடன்		14,955,577.74	8,740,266.99
நலன்புரிக் கடன்		10,000.00	10,000.00
கல்விக் கடன்		89,766.61	125,383.77
கிடைக்க வேண்டிய சேவைக் கட்டணங்கள் - நகர அபிவிருத்தி அதிகாரசபை		207,331,767.00	207,331,767.00
கிடைக்க வேண்டிய கடன் - விசிறி கடன்		-	6,047,908.85
கிடைக்க வேண்டிய கணக்குகள்		740,056,093.78	442,935,419.05
ஒப்பந்த முற்பணம்		1,323,113.95	1,323,113.95
நடமாடும் வண்டி இருப்பு		41,000.00	41,000.00
இருப்பு வள நிலையம்		687,105.50	687,105.50
கருத்திட்டம்		14,294,796.53	75,161,159.52
சஹஸ்புர வர்த்தக அலகுகள்		44,777,000.00	44,777,000.00
லுனாவ வீடமைப்பு அலகு இருப்பு (164 அலகுகள்)		54,251,358.81	651,016,306.14
லுனாவ வீடமைப்புக் கருத்திட்டம் இருப்பு		94,611,202.05	94,611,202.05
முதலீடுகள்		1,162,751,854.45	916,500,000.00
மொத்த நடைமுறை சொத்துக்கள்		**2,396,041,592.06**	**2,508,134,220.17**
நடைமுறையல்லா சொத்துக்கள்		-	-
கடன் இருப்பு (கடன்பட்டோர்)		581,584,752.51	429,042,347.01
மேற்கொண்டு வரும் வேலைகள்		14,754,152.70	13,221,994.16
ஆதனம், பொறி மற்றும் உபகரணம்		460,361,304.19	51,107,430.91
அருவைச் சொத்துக்கள்		-	-
கணக்கீட்டு மென்பொருள்		500,000.00	500,000.00
மொத்த நடைமுறையல்லா சொத்துக்கள்		**1,057,200,209.40**	**493,871,772.08**
மொத்த சொத்துக்கள்		**3,453,241,801.46**	**3,002,005,992.25**
பொறுப்புக்கள் மற்றும் உரிமையாண்மை			
நடைமுறைப் பொறுப்புக்கள்			
அட்டுறு செலவினம்		72,461,817.89	112,830,040.86
முகாமைத்துவக் கூட்டுத்தாபன நிதியம்		39,197,354.45	26,381,854.45
தடுத்து வைக்கப்பட்ட நிதி		154,124.54	305,822.60
துருஇத்துருகம - முற்பணமாகப் பெற்ற தவணைப்பணம்		7,500.00	-
தலவாக்கலை - முற்பணமாகப் பெற்ற தவணைப்பணம்		-	15,000.00
சஹஸ்புர - முற்பணமாகப் பெற்ற தவணைப்பணம்		-	-
சிலாபம் - முற்பணமாகப் பெற்ற தவணைப்பணம்		-	86,346.28
ஹம்பாந்தோட்டை துப்பரவேற்பாட்டு வசதிகள் மேம்பாட்டு நிகழ்ச்சித்திட்டம்		-	4,514,970.13
தலவாக்கலை - தவணைப்பணம்		-	-
லுனாவை தவணைப்பணம் மீளப்பெற்றது		17,458,000.00	140,605,000.00
சிலாபம் - தவணைப்பணம்		1,950.00	-
திருப்பிச் செலுத்தக்கூடிய கேள்வி வைப்பு		10,000.00	10,000.00
பிற்போடப்பட்ட வருமான கொடை (லுனாவ)		-	751,106,192.09
திறைசேரி கடன்		-	125,016,000.00
அநுராதபுரம் உறுதிக் கட்டணம்		50,275.00	-
எஸ்எம் நிகழ்ச்சித்தட்டத்துக்கான கொடை		4,825.00	-

`

மொத்த நடைமுறைப் பொறுப்புக்கள்	**129,345,846.88**	**1,160,871,226.41**
நடைமுறையல்லாத பொறுப்புக்கள்	-	-
பணிக்கொடை ஒதுக்கம்	28,186,117.50	25,147,323.00
இடர் கடனுக்கான ஒதுக்கம்	15,000,000.00	15,000,000.00
மொத்த நடைமுறையல்லாத பொறுப்புக்கள்	**43,186,117.50**	**40,147,323.00**
மொத்த பொறுப்புக்கள்	**172,531,964.38**	**1,201,018,549.41**
	-	-
தேறிய சொத்துக்கள்	**3,280,709,837.08**	**1,800,987,442.84**
உரிமையாண்மை மற்றும் திரண்ட மூலதனம்		
திறைசேரிக் கொடை	1,987,156,586.43	716,109,824.18
மூலதனக் கொடை – நிலையான சொத்துக்கள்	8,604,229.82	5,745,875.31
திரட்டிய நிதியம்	-	6,641,977.00
அரச கொடை	470,898,036.77	108,034,839.91
வருமான ஒதுக்கம்	36,625,000.00	36,625,000.00
மீள்மதிப்பீட்டுத் ஒதுக்கம்	38,515,350.07	39,259,145.55
திறைசேரி கொடை மனிதவள அபிவிருத்தி மூலதனம்	3,672,705.86	6,285,000.00
	2,545,471,908.95	**918,701,661.95**
	-	-
நிலுவை வருமானம் (செலவினம்)	97,666,409.77	97,666,409.77
முன்னைய ஆண்டுக்கான செலவின மிகை	272,849,771.84	784,619,371.12
காலஎல்லைக்கான மிகை வருமானம் ∴ மிகை செலவினம்	364,721,746.52	-
	735,237,928.13	**882,285,780.89**
	-	-
மொத்த உரிமையாண்மை	**3,280,709,837.08**	**1,800,987,442.84**

நகரக் குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபை
2022.12.31 ஆம் திகதியுடன் நிறைவடைந்த ஆண்டுக்கான
நிதிச் செயலாற்றுகைக் கூற்று

விபரம்	தற்போதைய மீதி (ரூ.)	முன்னைய ஆண்டு மீதி (ரூ.)
வருமானம்		
திறைசேரிக் கொடை – மீண்டெழும்	**155,000,000.00**	**155,000,000.00**
திறைசேரிக் கொடை – மனிதவள நிகழ்ச்சித்திட்டம்	**-**	**26,980,000.00**
பிற்போடப்பட்ட வருமானம்	**11,391,602.17**	**3,233,180.83**
வட்டி வருமானம்	**161,823,661.56**	**22,129,237.42**
. **ஏனைய வருமானம்**	**12,986,065.96**	**4,963,703.95**
. **வீடமப்புக் கருத்திட்டங்களிலிருந்தான இலாபம்**	**232,269,606.31**	**766,350,947.45**
அகற்றல் மூலமான இலாபம்	**-**	**15,369,916.70**
. **திறைசேரிக் கொடை - ஹொரனை வீடமைப்புத்திட்டம்**	**-**	**8,804,705.87**
மொத்த வருமானம்	**573,470,936.00**	**1,002,831,692.22**
நிருவாக செலவினம்		
ஆளுக்குரிய வேதனாதிகள்	**118,945,680.27**	**100,482,235.61**
கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு கொடுப்பனவு	225,000.00	-
வரவு செலவுத்திட்ட கொடுப்பனவு	7,664,059.13	-
வாழ்க்கைச் செலவுக கொடுப்பனவு	11,862,827.07	-
பணிப்பாளாகளுக்கான கொடுப்பனவு	1,262,000.00	970,000.00
ஊ.சே.நிதியம்	9,244,333.60	9,275,940.89
ஊ.ந.நிதியம்	2,311,083.36	2,191,864.60
லீவு நாள் கொடுப்பனவு	1,600,700.00	-
ஏனைய கொடுப்பனவுகள்	230,000.00	1,793,050.00
மேலதிக நேரம் மற்றும் லீவு நாள் கொடுப்பனவு	4,469,889.26	4,867,094.11
சம்பளமும், வேதனமும்	65,165,746.73	73,917,036.51
பணிப்பாளர் சபை கூட்டங்களுக்காக பதவியணியின் கொடுப்பனவு	62,000.00	-
பதவியணி நட்டஈட்டுக் கட்டணம்	572,840.00	-
பதவியணி பணிக்கொடை	4,401,239.50	4,512,017.50
பதவியணி ஊக்குவிப்புக் கொடுப்பனவு	4,740,000.00	1,755,000.00
தொலைபேசி கொடுப்பனவு - அதிகாரிகள்	693,459.67	-
தொலைபேசி கொடுப்பனவு - ஏனைய பதவியணியினர்	675,000.00	-
பயிலுனர் கொடுப்பனவு	848,000.00	-
பிரயாணக் கொடுப்பனவு	757,500.00	-
சீருடை கொடுப்பனவு	195,000.00	64,500.00
வாகனக் கொடுப்பனவு	600,000.00	-
நலன்புரி	1,365,001.95	1,135,732.00
	-	-
. **பிரயாணம்**	**1,949,976.62**	**426,040.57**
பிரயாணம் மற்றும் பட்டா (அதிகாரிகள்)	215,000.00	-
பிரயாண மற்றும் பட்டா (பதவியணி)	604,400.00	-
பிரயாணம் உள்நாடு	1,130,576.62	426,040.57
	-	-
. **வழங்கல் செலவினம்**	**16,656,620.44**	**10,615,268.23**
எரிபொருள் மற்றும் உராய்வுநீக்கிகள்	7,442,656.17	4,046,941.99
செய்திப்பத்திரிகை	-	26,630.00
ஏனைய வழங்கல் செலவினம் (நுகர்வுப்பொருள்)	876,901.80	1,236,965.55
முத்திரை ∴ தபால்	569,018.00	169,302.50
எழுதுகருவி மற்றும் அலுவலகத் தேவைகள்	7,768,044.47	5,135,428.19
	-	-
. **ஒப்பந்தச் சேவைகள்**	**38,670,983.37**	**41,979,091.24**
தங்குமிட செலவினம்	22,250.00	54,200.00
விளம்பரம் ∴கண்காட்சி	608,902.00	856,102.50
கணக்காய்வுக் கட்டணம்	-	1,000,000.00
வங்கிக் கட்டணம்	5,410.00	2,166.00

`

வங்கிக் கட்டணங்கள் (ஜீபு)	48,480.70	-
வைபவ செலவினம்	871,018.00	562,424.75
சுத்தம் செய்யும் கட்டணம்	993,841.30	957,744.00
வாகன லீசின வாடகை	3,667,300.78	10,253,645.00
சட்ட செலவினம்	592,135.00	323,872.67
அலுவலக வாடகை	25,412,887.50	21,501,385.20
ஏனைய சேவைச் செலவினங்கள்	124,915.00	530,894.74
அச்சுக் கட்டணம்	824,341.00	2,500,735.00
மீட்டல் செலவினம்	285,509.01	87,524.39
பாதுகாப்பு கட்டணம்	180,000.00	30,500.00
வேலைத்தள பயன்பாட்டு பட்டியல் செலவு (நீர்,மின், பிற)	7,995.69	4,483.70
ஏனைய பதவியணி செலவினம்	284,585.00	-
தொலைபேசி கட்டணம் (தொடர்பாடல்)	1,187,279.50	1,300,489.49
பயிற்சிச் செலவினம் (பதவியணி)	556,653.00	830,740.00
போக்குவரத்து	2,997,479.89	1,182,183.80
. **பராமரிப்புச் செலவினம்**	**6,443,832.32**	**8,614,314.85**
கணக்குகள் பொதியின் பராமரிப்பு	72,000.00	-
புதுப்பித்தல் மற்றும் பராமரிப்பு - கணினி	223,075.62	326,300.00
புதுப்பித்தல் மற்றும் பராமரிப்பு - பொறி	1,020,402.60	1,356,566.68
புதுப்பித்தல் மற்றும் பராமரிப்பு - வாகனம்	3,926,657.97	3,519,907.48
புதுப்பித்தல் மற்றும் பராமரிப்பு - அலுவலக கட்டிடம்	383,869.26	2,824,239.08
வாகனம் காப்புறுதி	817,826.87	587,301.61
	-	-
. **ஏனைய மீண்டுவரும் செலவினம்.ஏற்பாடு**	**17,286,721.76**	**24,614,031.50**
அகற்றல் பொருள் கணக்கு	18,049.75	-
தேய்மானம் - தளபாடம் மற்றும் பொருத்தல்கள்	805,086.20	635,817.13
தேய்மானம் - கணினி	6,705,075.26	6,105,780.18
தேய்மானம் - சாரதி ஓய்வறை	142,560.00	35,640.00
தேய்மானம் - அலுவலக உபகரணம்	1,580,457.99	1,639,642.03
தேய்மானம் -களஞ்சிய அறை	275,400.00	20,560.68
தேய்மானம் - வாகனம்	6,779,452.05	5,565,550.68
தேய்மானம் - அநுராதபுரம் கட்டிடம்	980,640.51	245,160.13
இடர் கடன் நிதியம்	-	9,305,245.35
ஐயக் கடன்பட்டோர் - விசிறி கடன்	-	1,060,635.32
	-	-
அபிவிருத்திச் செலவினம்	**8,795,374.70**	**31,481,339.10**
அங்குலான பராமரிப்புச் செலவினம்	448,076.72	524,880.00
அநுராதபுரம் பராமரிப்புச் செலவினம்	116,294.00	-
பம்பரகெலே வீடமைப்புக் கருத்திட்டம் - ஆரம்ப செலவினம்	15,108.24	-
சிலாபம் வீடமைப்புக் கருத்திட்டம் பராமரிப்புச் செலவினம்	659,899.53	-
ஹொரன வீடமைப்புக் கருத்திட்டம்	-	8,559,544.41
சுயசக்தி மனித அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம்	6,646,548.17	22,047,013.63
லுணாவ வீடமைப்புத்திட்டம் திறந்துவைத்தல் செலவினம்	-	0.01
லுணாவ பராமரிப்புச் செலவினம்	73,713.00	-
ஸ்ரீ விக்ரமபுர செலவினம்	830,935.04	253,785.66
தலவாக்கலை வீடமைப்புக் கருத்திட்டத்தின் பராமரிப்புச் செலவினம்	4,800.00	96,115.39
	-	-
மொத்த செலவினம்	**208,749,189.48**	**218,212,321.10**
	-	-
காலப்பகுதிக்கான மிகை.(குறை)	**364,721,746.52**	**784,619,371.12**

நகரக் குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபை
2022 டிசம்பர் 31 ஆம் திகதிக்கு
காசுப்பாய்ச்சல் கூற்று

	2022	2021
செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்தான காசோட்டம்		
பெறுகை		
திறைசேரிக் கொடை (மீண்டெழும்)	155,000,000.00	155,000,000.00
ஏனைய வருமானங்கள்	7,533,991.07	1,343,180.54
சேமிப்பு வைப்பு வட்டி வருமானம்	480,479.85	146,864.27
காசு முற்பணம்	2,020,756.00	
உறுதிக் கட்டணம்	539,945.00	186,190.00
கொடை	4,825.00	
வீடமைப்புக் கருத்திட்ட விற்பனை வருமானம்	289,227,250.00	792,720,000.00
	454,807,246.92	949,396,234.81
செலுத்தல்கள்		
காசு முற்பணம்	8,909,064.02	353,701.35
சம்பளம் மற்றும் ஏனைய கொடுப்பனவுகள்	104,515,038.02	90,351,833.81
மேலதிக நேரம் மற்றும் பிரயாணச் செலவினம்	2,500,662.41	4,643,233.08
சேவை மற்றும் பெறுகை	13,827,030.21	11,451,983.57
ஒப்பந்தச் சேவைகள்	46,681,663.27	30,268,563.32
பராமரிப்புச் செலவினம்	6,641,029.33	7,351,643.14
மனித அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம்	7,693,251.81	22,213,263.00
ஏனைய வருமான மீளளிப்பு	466,678.50	
உற்சவ முற்பணம்	703,750.00	65,166.54
பணிக்கொடை செலுத்தல்	1,334,945.00	696,980.00
விற்பனை வருமான மீளளிப்பு (தவணைப்பணம்)	16,780,000.00	
சஹஸ உறுதிக் கட்டணம்	391,600.00	121,120.00
	210,444,712.57	167,517,487.81
செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்தான தேறிய காசோட்டம்	**244,362,534.35**	**781,878,747.00**
முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்தான காசோட்டம்		
பெறுகைகள்		
திறைசேரிக் கொடை (மனித அபிவிருத்தி மற்றும் மூலதனம்)	4,500,000.00	154,996,000.00
கடன் அறவீட்டு தவணை	115,673,249.74	10,880,239.25
வாகனம் விற்பனை		15,919,907.00
நிலையான வைப்பு வட்டி வருமானம்	106,655,818.69	8,722,329.47
இடர் கடன்	2,237,130.18	6,356,685.06
நகரக் குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் ஊழியர் வீடமைப்புக் கடன் அறவீடு	258,961.77	3,926,460.72
	229,325,160.38	**200,801,621.50**
கொடுப்பனவுகள்		
வீடமைப்புக் கருத்திட்ட செலவினம்	30,354,142.02	69,955,186.90
கருத்திட்டத்தின் பராமரிப்பு	2,125,437.74	688,995.00
நிலையான சொத்துக் கொள்வனவு	61,592,264.98	7,354,375.91
இடர் கடன்	11,775,866.97	2,250,000.00
கல்விக் கடன்	60,000.00	236,250.00
அங்குலான விசிறி கடன்	500,000.00	
வட்டி மீளச்செலுத்தல் - கொ.மா.ச.	4,744,754.13	
முதலீடு - நிலையான வைப்பு	380,251,854.45	524,500,000.00
	491,404,320.29	604,984,807.81
முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்தான தேறிய காசோட்டம்	**(262,079,159.91)**	**(404,183,186.31)**
நிதி நடவடிக்கைகளிலிருந்தான காசோட்டம்		
பெறுகைகள்		
முகாமைத்துவக் கூட்டுத்தாபன நிதியம்	13,417,500.00	22,252,000.00
	13,417,500.00	**22,252,000.00**
கொடுப்பனவுகள்		
திறைசேரி கடனுக்கான நிதி மீளளிப்பு	125,016,000.00	

`

மு.கூ. நிதியம் மீளளிப்பு - லுனாவ	500,000.00	
முகாமைத்துவக் கூட்டுத்தாபன நிதியம் - அங்குலான	202,000.00	412,000.00
	125,718,000.00	**412,000.00**
நிதி நடவடிக்கைகளிலிருந்தான தேறிய காசோட்டம்	**(112,300,500.00)**	**21,840,000.00**
தேறிய காசு மற்றும் காசுக்கு சமமானவை (அதிகரிப்பு ∴(குறைவு))	(130,017,125.56)	399,535,560.69
ஆண்டின் ஆரம்பத்தில் காசும், காசுக்கு சமமானவைகளும்	448,179,922.48	48,644,361.79
ஆண்டின் இறுதியில் காசும், காசுக்கு சமமானவைகளும்	318,162,796.92	448,179,922.48

நகரக் குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபை
2022 டிசம்பர் 31 ஆம் திகதிக்கான
உரிமை மாற்றம் பற்றிய கூற்று

கணக்கின் பெயர்	ஆரம்ப மீதி		ஆண்டினுள் மாற்றங்கள்				இறுதி மீதி (ரூ.)	
	2021	2022	2021		2022		2021	2022
			அதிகரிப்பு	குறைவு	அதிகரிப்பு	குறைவு		
ஆரம்ப மூலதனக் கணக்கு	-	-	-	-	-	-	-	-
திரட்டிய நிதியக் கணக்கு	6,641,977.00	6,641,977.00	-	-	-	6,641,977.00	6,641,977.00	-
திறைசேரி கொடை கணக்கு	1,993,016,243.85	716,109,824.18	125,016,000.00	1,401,922,419.67	1,415,009,238.89	143,962,476.64	716,109,824.18	1,987,156,586.43
அரச கொடை கணக்கு	68,332,962.51	108,034,839.91	46,380,830.70	6,678,953.30	367,052,974.00	4,189,777.14	108,034,839.91	470,898,036.77
நிலையான சொத்துக்களுக்கான மூலதனக் கொடை	5,300,102.84	5,745,875.31	3,000,000.00	2,554,227.53	4,500,000.00	1,641,645.49	5,745,875.31	8,604,229.82
திறைசேரி கொடை மவஅபி(மூலதனம்)	6,285,000.00	6,285,000.00	-	-	-	2,612,294.14	6,285,000.00	3,672,705.86
ஒதுக்க நிதியக் கணக்கு	36,625,000.00	36,625,000.00	-	-	-	-	36,625,000.00	36,625,000.00
மீள்மதிப்பீட்டு ஒதுக்கம்	39,318,995.55	39,259,145.55	-	59,850.00	-	743,795.48	39,259,145.55	38,515,350.07
திரட்டிய நிதியக் கணக்கு	97,666,409.77	882,285,780.89	784,619,371.09	-	1,053,658,538.66	1,200,706,391.42	882,285,780.86	735,237,928.13
மொத்தம்	**2,253,186,691.52**	**1,800,987,442.84**	**959,016,201.79**	**1,411,215,450.50**	**2,840,220,751.55**	**1,360,498,357.31**	**1,800,987,442.81**	**3,280,709,837.08**

தேசிய கணக்காய்வு அலுவலகம்

எனது இல. HUD/C/USDA/FA/22/01 திகதி : 2023 யூன் மாதம் 30 ஆம் திகதி

தலைவர்,

நகரக் குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபை.

நகரக் குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மற்றும் வேறு சட்டரீதியான மற்றும் ஒழுங்குறுத்தல் தேவைப்பாடுகள் பற்றிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 ஆம் பிரிவுக்கு அமைய கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை

1. நிதிக் கூற்றுக்கள்

1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

நகரக் குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றுகைக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் பற்றிய கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள், இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படல் வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்திற்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு அமைய எனது அறிக்கை எதிர்காலத்தில் பாராளுமன்றத்தில் சபாபீடத்தில் வைக்கப்படும்.

எனது இவ்அறிக்கையின் முனைப்பழியுள்ள கருத்துக்கான அடிப்படையாக விபரிக்கப்பட்டுள்ள விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து அதிகாரசபையின் 2022

டிசம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை அரசதுறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும், நியாயமாகவும் வெளிப்படுத்துகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

(அ) இலங்கை அரசதுறை கணக்கீட்டு நியமம் 01 இன் 45 மற்றும் 46 ஆம் பந்திகளுக்கு அமைய அளவு ரீதியான மற்றும் சமமான அம்சங்களான விடயங்கள் தனித்தனியாக சமர்ப்பிக்கப்படல் வேண்டும் என்பதுடன், திரட்டிய மற்றும் வகைப்படுத்தப்பட்ட பொழிப்புத் தரவுகளை நிதிக் கூற்றுக்களில் சமர்ப்பித்தல் வேண்டும். அவ்வாறாயினும், அதிகாரசபையினால் அதற்கு முதரணாக மீளாய்வு ஆண்டுக்கு நிதிக் கூற்றுக்களை சமர்ப்பிக்கும் போது சமமான விடயங்களை பொழிப்புரையாக வெளிப்படுத்துவதற்குப் பதிலாக விரிவாக நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருந்தது.

(ஆ) இலங்கை அரசதுறை கணக்கீட்டு நியமம் 02 இன் 9 ஆம் பந்திக்கு அமைய காசு மற்றும் காசுக்கு சமமானவையும் என்பதில் பெற்றுக் கொள்ளப்பட்ட திகதி முதல் 03 மாதங்கள் அல்லது அதற்குக் குறைவான குறுகிய கால முதலீடுகள் உள்ளடங்கும். எனினும் அதிகாரசபையினால் ரூபா மில்லியன் 258 பெறுமதிமிக்க 03 மாத முதிர்ச்சிக் காலத்தைக் கொண்ட நிலையான வைப்புக்களின் பெறுமதி காசும், காசுக்கு சமமானவைகளுமாக உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. அதன் காரணமாக மீளாய்வு ஆண்டின் இறுதியிலான நிதி நிலைமைக் கூற்றில் காட்டப்பட்டுள்ள காசும், காசுக்கு சமமானவைகளும் மிகையாகக் காட்டப்பட்டுள்ளது.

(இ) இலங்கை அரசதுறை கணக்கீட்டு நியமம் 03 இன் 47 ஆம் பந்திக்கு அமைய ஒரு நிறுவனத்தினால் முன்னைய காலத்திற்குரிய தவறுகள் கண்டுபிடிக்கப்பட்டதன் பின்னர், வெளியிடுவதற்காக அங்கீகரிக்கப்பட்டுள்ள முதலாவது நிதிக் கூற்றுக்களின் தொகுதியில் தவறுகள் இடம்பெற்றுள்ள காலப்பகுதிக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ள ஒப்பீட்டு ரீதியான பெறுமதிகளை மீண்டும் குறிப்பிடுவதன் மூலம் சீராக்கல் செய்தல் வேண்டும். எனினும் அதிகாரசபையினால் 2015 அக்டோபர் மாதம் 02 ஆம் திகதிய 05/2015/04 ஆம் பணிப்பாளர் சபை பத்திரத்திற்கமைய நிறுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்த சீதாவக்க வீடமைப்புக் கருத்திட்டத்தின் நிர்மாணிப்புக்கு அரசிடம் கிடைத்த ரூ.மி. 2.41 ஆன கொடைகளுக்கு உரிய சீராக்கல்களை குறித்த ஆண்டு தொடர்பாக

மேற்கொள்ளாது மீளாய்வு ஆண்டில் மேற்கொண்டதன் காரணமாக அதிகாரசபையின் மீளாய்வு ஆண்டில் மிகையானது மேற்படி பெறுமதியினால் அதிகரித்துக் காணப்பட்டது. மேலும், கடந்த ஆண்டு தொடர்பாக அதிகாரசபையினால் செலுத்தப்பட்ட ரூ.மி. 1.59 ஆன ஊக்குவிப்புக் கொடுப்பனவுகள் மீளாய்வு ஆண்டு தொடர்பில் சீராக்கல் செய்யப்பட்டிருந்தமை காரணமாக மீளாய்வு ஆண்டின் மிகை மேற்படி பெறுமதியினால் குறைத்துக் கணிப்பிடப்பட்டுள்ளது.

(ஈ) இலங்கை அரசதுறை கணக்கீட்டு நியமம் 07

(i) நியமத்தின் 55 ஆம் பந்திக்கு அமைய, ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் நீக்கப்படும் பட்சத்தில் தேறிய சொத்து / உரிமையாண்மையில் உள்ளடங்கியுள்ள மேற்படி சொத்துக்களின் மீள்மதிப்பீட்டு மிகை நேரடியாக திரட்டிய மிகைக்கு அல்லது குறைக்கு மாற்றப்படல் வேண்டும். அவ்வாறாயினும் அதிகாரசபையினால் ஆண்டினுள் நீக்கப்பட்ட சொத்துக்கள் 55 தொடர்பாக கடந்த ஆண்டுகளில் இனங்காணப்பட்டு கணக்குகளில் பதிவு செய்யப்பட்டிருந்த ரூ.மி. 0.74 ஆன மீள்மதிப்பீட்டு மிகையை மீள்மதிப்பீட்டு ஒதுக்கக் கணக்கிலிருந்து நீக்கி திரட்டிய மிகைக் கணக்கிற்கு சீராக்கல் செய்வதற்குப் பதிலாக மீளாய்வு ஆண்டின் மிகைக்கு சீராக்கல் செய்ததன் காரணமாக ஆண்டின் இலாபம் குறித்த தொகையினால் குறைவாக கணிப்பீடு செய்யப்பட்டிருந்தது.

(ii) அரச கொடையாக 2019 ஏப்ரல் 24 ஆம் திகதி கொடைபத்திர இலக்கம் 4/7/7422 இன் கீழ் அதிகாரசபைக்கு சாட்டுதல் செய்யப்பட்டிருந்த அநுராதபுரம் துரு இத்துரகம 108 காணித் துண்டுகளில், 06 காணித்துண்டுகளில், சுதாரக தொழில்நுட்பத்தின் கீழ் நிர்மாணிக்கப்பட்ட 06 வீடுகளின் பெறுமதி ரூ.மி. 5.92 ஆக 2016 ஆம் ஆண்டு விலைமதிப்புச் செய்யப்பட்டிருந்தது. அவ்வாறாயினும் 2022 அக்டோபர் மாதம் 10 ஆம் திகதி தேசிய பொறியியல் ஆராய்ச்சி அபிவிருத்தி நிறுவகத்தினால் வெளிக்கள பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு வழங்கப்பட்டுள்ள அறிக்கைக்கு அமைய பலவீனமான நிர்மாணிப்பு முறைகளைப் பயன்படுத்தி இந்த வீடுகள் நிர்மாணிக்கப்பட்டுள்ளன என்றும் களிமண் மற்றும் சீமேந்து பயன்படுத்தப்பட்டு தயார் செய்யப்பட்டுள்ள சுவர்களுக்கு கூரையைத் தாங்கிக் கொள்வது கடினமாகும் என்றும் இதன் காரணமாக இந்த வீடுகள் மனிதன் வாழ பொருத்தமற்றது என்றும் குறிப்பிடப்பட்டிருந்தது. அதற்கமைய இந்த வீடுகளின் பெறுமதி குறைந்துள்ளமை இழப்பொன்றாக இனங்காணப்பட வேண்டுமாயினும், அவ்வாறு இனங்காணப்பட்டிருக்காமை காரணமாக நடைமுறையல்லாத சொத்துக்கள் மேற்படி தொகையினால் மிகைத்து கணிப்பிடப்பட்டுள்ளன.

எவ்வாறாயினும், அரச விலைமதிப்புத் திணைக்களத்தினால் 2022 மே மாதம் 18 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டிருந்த விலைமதிப்பு அறிக்கைக்கு அமைய மேற்படி 06 வீடுகளின் பெறுமதி ரூ.மி. 7.55 ஆக 2016 ஆம் ஆண்டு சமர்ப்பிக்கப்பட்டிருந்த விலைமதிப்பு அறிக்கையிலும் பார்க்க ரூ.மி. 1.62 இனால் பெறுமதி அதிகரித்து வழங்கப்பட்டிருந்தது. மேற்படி விலைமதிப்பைப் பெற்றுக் கொடுக்கும் போது சீமேந்தினால் தயார் செய்யப்பட்ட மற்றைய 102 வீடுகளுக்கும் சமமானதாக இந்த 6 வீடுகளும் கருதப்பட்டிருந்தன என்பது அவதானிப்புச் செய்யப்பட்டதுடன், அதற்கமைய இந்த விலைமதிப்பு கருத்து முரண்பாடுகளுக்கு காரணமாகின்றது என்பது அவதானிப்புச் செய்யப்பட்டது.

(உ) இலங்கை அரசதுறை கணக்கீட்டு நியமம் 11

(i) நியமத்தின் 10 ஆம் பந்தி மற்றும் IG 30 மற்றும் 31 பந்திகளுக்கு அமைய ஒரு நிறுவனத்திற்குக் கிடைத்த வளங்களுக்குப் பதிலாக நிறுவனம் நேரடியாக ஏதேனும் ஒன்றை பெற்றுக் கொடுக்க முடியுமாயினும் அது கிடைத்த வளங்களின் நியாயமான பெறுமதிக்கு சமமானதாக அல்லாத சந்தர்ப்பங்களில் பரிமாற்றப்படுகின்ற மற்றும் பரிமாற்றப்படாத கொடுக்கல் வாங்கல்களின் கலப்பைக் கொண்டுள்ளதாக என்பதை குறித்த நிறுவனம் தீர்மானத்தல் வேண்டும் என்பதுடன் குறித்த ஒவ்வொரு கூறும் தனித்தனியாக இனங்காணப்படல் வேண்டும். எனினும் அதற்கு முரணாக நியாயமான பெறுமதி ரூ.மி. 120 ஆக விலைமதிப்புச் செய்யப்பட்டிருந்த ஏக்கர் 9 ரூட் 3 பர்சஸ் 21.10 அளவான நிட்டம்புவ ஒர்சார்ட்வத்த காணியிலிருந்து 9 ஏக்கர் பர்சஸ் 20.20 ஆன அளவு காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவினால் அதிகாரசபைக்கு வழங்கப்பட்டு அதற்குப் பதிலாக அதிகாரசபையிடமிருந்து ரூ.மி. 60 மாத்திரம் அறவிடப்பட்டிருந்ததுடன் செலுத்த வேண்டி ஏற்பட்ட தொகை மாத்திரம் நிதிக் கூற்றுக்கள் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. அதிகாரசபையினால் சாட்டுதல் செய்யப்பட்ட பகுதியின் பெறுமதியை விலைமதிப்புச் செய்து நிதிக் கூற்றுக்களில் உட்புகுத்துவதற்கு அல்லது தேவையான வெளிப்படுத்தல்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ii) நியமத்தின் 17 ஆம் பந்தியின் ஏற்பாடுகளுக்கு அமைய குறித்த நடைமுறை கடப்பாடுகள் நியமத்திற்கு அமைய கணக்குகளில் பதிவு செய்யப்பட வேண்டுமாயினும் லுனாவ வீடமைப்புக் கருத்திட்டத்திற்கு அரசாங்கத்தினால் பெற்றுக் கொடுக்கப்பட்டிருந்த ரூ.மி. 1,267.32 ஆன தொகை 2020 டிசம்பர் 02 ஆம் திகதிய அவி/20/1844/306/055 ஆம் இலக்க அமைச்சரவை தீர்மானத்திற்கு அமைய அரசாங்கத்திற்கு மீளச் செலுத்தப்பட வேண்டுமாயினும் நடைமுறை கடப்பாடுகள் கணக்குகளில் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை. மேற்படி அரச கொடை நிதி நிலைமைக் கூற்றில் உரிமையாண்மை மற்றும் ஒதுக்கத்தின் கீழ்

காட்டப்பட்டுள்ளதன் காரணமாக உரிமையாண்மை மற்றும் ஒதுக்கமானது குறித்த தொகையினால் மிகைத்துக் காட்டப்பட்டுள்ளது.

(iii) நியமத்தின் 14, 15, 16 மற்றும் 76 ஆம் பந்திகள் மற்றும் IG 18, 19, 20 மற்றும் 21 பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு அமைய பரிமாற்றம் செய்யப்படாத கொடுக்கல் வாங்கல்களிலிருந்தான அறவீடுகள் நிதிச் செயலாற்றுகைக் கூற்றில் இனங்காணப்படல் வேண்டுமாயினும் மீளாய்வு ஆண்டின் இறுதி வரை அதிகாரசபைக்கு கிடைத்திருந்த திறைசேரிக் கொடைகளிலிருந்து 2022 டிசம்பர் 31 ஆம் திகதிக்கு நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள திரட்டிய மீதியான ரூ.மி. 2,458.05 ஆன தொகை நியமத்திற்கு அமைய நிதிக் கூற்றுக்களில் சீராக்கல் செய்யப்பட்டிருக்கவில்லை.

மேலும், 42 ஆம் பந்திக்கு அமைய, பரிமாற்றப்படாத கொடுக்கல் வாங்கலொன்றின் மூலம் பெற்றுக் கொள்ளப்பட்ட சொத்தொன்றை முதல் தடவை அளவிட வேண்டியது பெற்றுக் கொள்ளப்பட்ட திகதியின் நியாயமான பெறுமதிக்கு எனினும், இலவச கொடையாக கூட்டுத்தாபனத்திற்குக் கிடைத்த மொரட்டுவை லுனாவ அரசுக்கு உரித்தான காணி 2022 ஆம் ஆண்டு அதிகாரசபைக்கு சாட்டுதல் செய்யப்பட்டுள்ளதுடன், 2022 ஆம் ஆண்டில் குறித்த வீடமைப்புக் கருத்திட்டம் பூர்த்தி செய்யப்பட்டிருந்தது. அவ்வாறு நிர்மாணிக்கப்பட்ட 356 வீடுகள் விற்பனை அடிப்படையில் நீக்கம் செய்யப்பட்டுள்ள போதிலும், மேற்படி நீக்கம் செய்யும் செலவினத்தை கணிப்பீடு செய்யும் போது இக்காணியின் செலவினம் கவனத்தில் கொள்ளப்பட்டிருக்கவில்லை. இதனால் வீட்டின் செலவினத்தை கணிப்பீடு செய்துள்ள முறை சரியானதா என்பது சிக்கலான விடயமாகும். இக்காணியின் நியாயமான பெறுமதியை கணிப்பீடு செய்து மீளாய்வு ஆண்டின் இறுதியளவில் நிதிக் கூற்றுக்களில் சீராக்கல் செய்வதற்கேனும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(iv) நியமத்தின் 94 மற்றும் 96 ஆம் பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு முரணாக அதிகாரசபைக்கு மீளாய்வு ஆண்டில் கிடைத்த ரூ.மி. 8.6 ஆன மூலதனக் கொடை, உரிமையாண்மை மற்றும் ஒதுக்கத்தின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளதுடன், ரூ.மி. 14 ஆன பிற்போடப்பட்ட வருமானமும் இனங்காணப்பட்டிருந்தது.

(v) நியமத்தின் 106 மற்றும் 107 பந்திகளுக்கு அமைய காலப்பகுதியில் பரிமாற்றம் செய்யப்படாத கொடுக்கல் வாங்கல்களின் மூலம் பெற்ற அறவீட்டின் பெறுமதி பிரதான வகுப்பு மூலம் தனித்தனியாக வெளிப்படுத்தி நிதிக் கூற்றுக்களின் முகப்பில் அல்லது குறிப்புக்களில் வெளிப்படுத்தல் வேண்டுமாயினும் அவ்வாறு பரிமாற்றம் செய்யப்படாத கொடுக்கல் வாங்கல்களின் மூலம் பெற்றுக் கொண்ட

அறவீட்டை இனங்காண்பதற்கு அதிகாரசபையினால் பயன்படுத்திக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளையும் வெளிப்படுத்தல் வேண்டுமாயினும் மேற்படி வெளிப்படுத்தல்களும் செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஊ) இலங்கை அரசதுறை கணக்கீட்டு நியமம் 12

(i) நியமத்தின் 14 (அ) பந்திக்கு அமைய குத்தகை கொள்வனவு உடன்படிக்கையின் இறுதியில் சொத்துக்களின் உரிமை குத்தகை கொள்வனவாளருக்கு சாட்டுதல் செய்யப்படுமாயின் அது நிதிசார் குத்தகை கொள்வனவாக இனங்காணப்படல் வேண்டும். அதற்கமைய, அதிகாரசபையினால் வர்த்தக அடிப்படையில் நீண்டகால குத்தகை உடன்படிக்கைக்கு அமைய நிறுவனத்தின் ஊழியர்களுக்கு நீக்கம் செய்யப்பட்ட லுனாவ வீடமைப்புக் கருத்திட்டத்தின் 22 வீடுகள் நிதிக் குத்தகையாக இனங்காணப்பட வேண்டுமாயினும், இந்த நியமத்திற்கு அமைய நிதிக் குத்தகைக் கொள்வனாக இனங்காணப்பட்டிருக்கவில்லை. 25 சதவீதமான ஆரம்ப கொடுப்பனவு மாத்திரம் பூர்த்தி செய்யப்பட்டிருந்ததன் காரணமாக இந்த வீடுகளை சாட்டுதல் செய்வது விற்பனையாகவும் ஆண்டினுள் இனங்காணப்பட்டிருக்கவில்லை. இது தொடர்பில் உகந்த கணக்கீட்டுக் கொள்கையும் இனங்காணப்பட்டிருக்கவில்லை.

(ii) அதிகாரசபையினால் இந்த நியமத்திற்கு முரணாக மீளாய்வு ஆண்டில் விற்பனை செய்யப்பட்ட 04 வீடமைப்புக் கருத்திட்டங்கள் தொடர்பில் ரூ.மி. 20.61 வருமானமாக இனங்காணப்பட்டிருந்ததுடன், இதன் காரணமாக மீளாய்வு ஆண்டின் மிகை மேற்படி பெறுமதியினால் மிகையாக கணிப்பிடப்பட்டிருந்தது.

(எ) இலங்கை அரசதுறை கணக்கீட்டு நியமம் இலக்கம் 13 இன் 7 ஆம் பந்திக்கு அமைய, முதலீட்டு ஆதனம் என்பது குத்தகை வாடகை உழைத்தல் அல்லது மூலதனப் பெறுமதி அதிகரிப்பதற்கு அல்லது மேற்படி இரண்டு நோக்கங்களுக்காகவும் வைத்திருக்கும் காணி அல்லது கட்டிடம் அல்லது கட்டிடத்தின் ஒரு பகுதி அல்லது இரண்டுமாகும். எவ்வாறாயினும், அதிகாரசபை குத்தகை வாடகை அடிப்படையில் வழங்கியிருந்த வீடமைப்புக் கருத்திட்டங்கள் 3 தொடர்பிலான ரூ.மி. 146.76 பெறுமதிமிக்க வீடுகள் மற்றும் வர்த்தக அலகுகள் முதலீட்டு ஆதனங்களாக இனங்காணப்படாது நிலையான சொத்துக்களின் கீழ் உட்புகுத்தப்பட்டிருந்தன.

(ஏ) இலங்கை அரசதுறை கணக்கீட்டு நியமம் இலக்கம் 20 இன் 96 ஆம் பந்திக்கு அமைய, உறுதியான ஆயுட் காலத்தைக் கொண்ட அருவைச் சொத்தொன்றின் தேய்மானம் பதிவழிப்புச் செய்ய வேண்டிய தொகைகள் யாதாயினும் முறையான அடிப்படையில் பயன்வாய்ந்த ஆயுட்காலம் முழுவதிலும் பகிரப்படல் வேண்டுமாயினும் அதிகாரசபைக்கு

உரித்தான ரூபா 500,000 பெறுமதிமிக்க கணக்கீட்டு மென்பொருளுக்காக மீளாய்வு ஆண்டில் எந்தவொரு தேய்மான செலவினமும் இனங்காணப்பட்டிருக்கவில்லை. மேலும் நியமத்தின் 117 ஆம் பந்திக்கு அமைய, அருவைச் சொத்துக்கள் தொடர்பில் மேற்கொள்ளப்பட வேண்டிய வெளிப்படுத்தல்களும் நிதிக் கூற்றுக்களில் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஐ) 2022 டிசம்பர் 31 ஆம் திகதிக்கு நிலையான வைப்புக்களுக்குக் கிடைக்க வேண்டிய வட்டி ரூ.மி. 51.48 ஆயினும் தடுத்துவைத்தல் வரி ரூ.மி. 2.71 உடன் கிடைக்க வேண்டிய வட்டி ரூ.மி. 54.19 ஆக நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்ததனால் மீளாய்வு ஆண்டில் மிகை ரூ.மி. 2.71 இனால் மிகையாக கணிப்பிடப்பட்டுள்ளது.

(ஒ) அதிகாரசபையின் நிதிகளிலிருந்து நிதி ஏற்பாடுகள் ஒதுக்கிக் கொள்ளப்பட்டு ஊழியர்களுக்கு இடர் கடன் வழங்குவதற்காக பேணிவரப்படுகின்ற இடர் கடன் ஏற்பாடுகள் நிதியத்தில் 2022 டிசம்பர் 31 ஆம் திகதிக்கு மீதி ரூ.மி. 15 உரிமையாண்மை மற்றும் ஒதுக்கத்தின் கீழ் காட்டப்பட்டிருக்கவில்லை என்பதுடன், நடைமுறையல்லாத பொறுப்புக்களின் கீழ் காட்டப்பட்டுள்ளது. இதன் காரணமாக குறித்த பெறுமதியில் நடைமுறையல்லாத பொறுப்புக்கள் மிகையாக கணிப்பீடு செய்யப்பட்டு உரிமையாண்மை மற்றும் ஒதுக்கம் குறைவாக கணிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

(ஓ) அதிகாரசபையின் சந்தைப்படுத்தல் பிரிவினால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களுக்கு அமைய 2022 டிசம்பர் 31 ஆம் திகதியளவில் லுனாவ வீடமைப்புக் கருத்திட்டதின் மூலம் வணிக அடிப்படையில் நீக்கம் செய்யப்பட்ட வீட்டு அலகுகள் 178 இலிருந்து ரூ.மி. 448.1 கிடைக்க வேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ள போதிலும், நிதிக் கூற்றுக்களுக்கு அமைய மேற்படி பெறுமதி ரூ.மி. 435.5 ஆக உள்ளதன் காரணமாக அவற்றுக்கு இடையே ரூ.மி. 12.56 ஆன வித்தியாசம் அவதானிப்புச் செய்யப்பட்டது.

(ஔ) 2022 டிசம்பர் 31 ஆம் திகதிக்கு ஹம்பாந்தோட்டை வீடமைப்புக் கருத்திட்டம் தொடர்பாக 2016 ஆம் ஆண்டு முதல் அறவிடப்பட்டிருக்க வேண்டிய மொத்த நிலுவைக் கடன் தவணைப் பெறுமதியான ரூ.மி. 3.4 கிடைக்க வேண்டிய கணக்குகளாக நடைமுறை சொத்துக்களின் கீழ் காட்டப்படல் வேண்டுமாயினும், இது நடைமுறையல்லாத சொத்துக்களின் கீழ் காட்டப்பட்டுள்ளதனால் அதிகாரசபையின் நடைமுறை சொத்துக்கள் மேற்படி தொகையினால் குறைத்து கணிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் *நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்* பகுதியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும்

பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 அதிகாரசபையின் 2022 ஆண்டறிக்கையில் உள்ளடங்கும் ஏனைய தகவல்கள்

இக்கணக்காய்வு அறிக்கையின் திகதியின் பின்னர் எனக்குப் பெற்றுத்தர எதிர்பார்க்கப்படுகின்ற அதிகாரசபையின் 2022 ஆம் ஆண்டறிக்கையில் உள்ளடங்கியுள்ள போதிலும் நிதிக் கூற்றுக்கள் மற்றும் அது பற்றிய எனது கணக்காய்வு அறிக்கையில் உள்ளடங்காக தகவல்கள், ஏனைய தகவல்கள் என்பதனால் கருதப்படுகின்றது. இந்த ஏனைய தகவல்களுக்கு முகாமைத்துவம் பொறுப்புக்கூறல் வேண்டும்.

நிதிக் கூற்றுக்கள் பற்றிய எனது கருத்துக்கள் ஏனைய தகவல்களை வெளிப்பத்துவதில்லை என்பதுடன் நான் அது பற்றி எவ்வகையிலும் சான்றுப்படுத்துவதோ அல்லது கருத்துக்களை வெளியிடுவதோ இல்லை.

நிதிக் கூற்றுக்கள் பற்றிய எனது கணக்காய்வு தொடர்பில், எனது பொறுப்பாக இருப்பது ஏனைய தகவல்களைப் பெற்றுக் கொள்ள இயலுமாகின்ற போது வாசித்தல் மற்றும் அவ்வாறு செய்யும் போது ஏனைய தகவல்களை நிதிக் கூற்றுக்களுடன் அல்லது கணக்காய்வின் போது அல்லது வேறு விதமாகக் பெற்றுக் கொண்ட எனது அறிவுக்கு அமைய போதியளவில் பொருத்தமற்றதாக உள்ளதா என்பது பற்றி ஆராய்வதாகும்.

இக்கணக்காய்வு அறிக்கையின் திகதிக்கு முன்னர் நான் பெற்றுக் கொண்ட ஏனைய தகவல்களின் அடிப்படையில் நான் மேற்கொண்ட பணிகளின் அடிப்படையில், குறித்த ஏனைய தகவல்கள் போதியளவிலானது என்பது தவறுதலாக குறிப்பிடப்பட்டுள்ளது என்று நான் தீர்மானம் செய்வதாயின், மேற்படி விடயத்தை நான் அறிக்கையிடுவது அவசியமாகும். கீழே விபரிக்கப்பட்டுள்ளவாறு, ஏனைய தகவல்களில் அவ்வாறான போதியளவிலான தவறுகள் வெளிப்படுத்தப்பட்டுள்ளதாக நான் தீர்மானம் செய்கின்றேன்.

(அ) அதிகாரசபையின் நிதிக் கூற்றுக்களுக்கு அமைய மீளாய்வு ஆண்டின் இறுதியளவில் லுனாவ வீடமைப்புக் கருத்திட்டத்தின் மூலம் 341 வீட்டு அலகுகள் விற்பனை செய்யப்பட்டிருந்ததுடன், இவற்றில் வீட்டு உரிமையாளர்கள் 128 பேர் முழுமையான தொகையாக ரூ.மி. 646.08 ஐ செலுத்தியுள்ளார்கள். எவ்வாறாயினும், அதிகாரசபையின் மீளாய்வு ஆண்டுக்குரிய வரைவு ஆண்டறிக்கைக்கு அமைய வீட்டு உரிமையாளர்கள் 140 பேர் ரூ.மி. 664.08 செலுத்தியுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

(ஆ) மேலும், ஒரு வீட்டின் பெறுமதியில் சுமார் 50 சதவீதத்தை மாத்திரம் செலுத்தியுள்ள வீட்டு அலகுகளுக்குரிய வீடுகளின் விற்பனை பெறுமதி ரூ.மி.

912.38 உம், மேற்படி வீட்டு அலகுகளுக்குரிய நிதிப் பெறுகை பெறுமதி ரூ.மி. 464.28 ஆயினும் வரைவு ஆண்டறிக்கைக்கு அமைய மேற்படி பெறுமதிகள் முறையே ரூ.மி. 912.91 மற்றும் ரூ.மி. 460.38 ஆகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

(இ) ஒரு வீட்டின் பெறுமதியில் 25 சதவீதத்தை மாத்திரம் செலுத்தியுள்ள வீட்டு அலகுகளின் எண்ணிக்கை 12 மற்றும் நேம்படி வீடுகளின் விற்பனை பெறுமதி ரூ.மி. 61.62 ஆயினும், வரைவு ஆண்டறிக்கையில் மேற்படி பெறுமதி முறையே வீட்டு அலகுகள் 13 மற்றும் ரூ.மி. 66.36 ஆகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதிகாரசபையின் 2022 ஆண்டறிக்கையை வாசிக்கும் போது, மேலும் சீராக்கல் செய்யப்படாத தவறுகள் வெளிப்படுத்தப்பட்டிருப்பின், அவை அரசியலமைப்பின் 154(6) உறுப்புரைக்கு அமைய நான் எதிர்காலத்தில் பாராளுமன்றத்தில் சபாபீடத்தில் வைக்கும் அறிக்கையில் உள்ளடக்கப்படும்.

1.4 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை அரச துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, அதிகாரசபை தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது அதிகாரசபையை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

அதிகாரசபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் அதிகாரசபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதிகாரசபை அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

1.5 நிதிக் கூற்றுக்களை கணக்காய்வு செய்வது தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்பு

பொதுவாக நிதிக்கூற்றுக்களாவன, மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்,

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச்

சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கம்பனிக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் கம்பனியின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதும் மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வின் போது இனங்காணப்பட்ட கணக்காய்வுக் கண்டுபிடிப்புக்கள், பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டுப் பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பில் கட்டுபாடுகளை மேற்கொள்ளும் தரப்பினர்கள் அறிவுறுத்தப்பட்டார்கள்.

2. வேறு சட்டரீதியான மற்றும் ஒழுங்குறுத்தல் தேவைப்பாடுகள் பற்றிய அறிக்கை

2.1 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பின்வரும் தேவைப்பாடுகள் தொடர்பில் விசேட ஏற்பாடுகள் உள்ளடங்குகின்றன.

2.1.1 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12(அ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாட்டுக்கு அமைய எனது அறிக்கையில் முனைப்பழியுள்ள கருத்துக்கான அடிப்படை எனும் பகுதியில் விபரிக்கப்பட்டுள் விடயங்களிலிருந்தான தாக்கங்கள் தவிர, கணக்காய்வுக்குத் தேவையான சகல தகவல்கள் மற்றும் தெளிவுபடுத்தல்களையும் நான் பெற்றுக் கொண்டேன் என்பதுடன், எனது பரிசோதனைகளின் போது தெரியவந்துள்ளவாறு முறையான நிதி அறிக்கைகளை அதிகாரசபை பேணிவந்திருந்தது.

2.1.2 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ) (iii) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாட்டுக்கு அமைய அதிகாரசபை சமர்ப்பித்துள்ள நிதிக் கூற்றுக்கள் கடந்த ஆண்டுடன் ஒத்திசைவதாக உள்ளன.

2.1.3 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ) (iv) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாட்டுக்கு அமைய இந்த அறிக்கையின் (ஆ), (உ), (ஊ), மற்றும் (எ) பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ள அவதானிப்புகள் தவிர கடந்த ஆண்டில் நான் சமர்ப்பித்திருந்த சிபாரிசுகள் இந்த நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

2.2 பின்பற்றப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் பெற்றுக் கொள்ளப்பட்ட சான்றுகளின் அடிப்படையில் போதியளவிலான விடயங்களின் வரையறைகளுக்குள், பின்வரும் கூற்றுக்களை வெளிப்படுத்துவதற்குக் காரணமான எந்தவொரு விடயத்தையும் நான் அவதானிப்புச் செய்யவில்லை.

2.2.1 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12(ஈ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாட்டுக்கு அமைய அதிகாரசபையின் நிருவாக சபையின் யாராயினும் உறுப்பினர் ஒருவர் அதிகாரசபையுடன் தொடர்புகொண்டு யாதாயினுமொரு உடன்படிக்கை தொடர்பில் நேரடியாக அல்லது மறைமுகமாக சாதாரண வியாபார நிலைமைக்கு புறம்பாக செயற்பட்டுள்ளமை.

2.2.2 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12(ஊ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாட்டுக்கு அமைய பின்வரும் அவதானிப்புக்களைத் தவிர்த்து யாதாயினும் ஏற்புடைய எழுத்துமூலமான சட்டம் அல்லது அதிகாரசபையின் நிருவாக சபையினால் வெளியிடப்பட்டுள்ள வேறு பொதுவான அல்லது விசேடமான ஏற்பாடுகளுக்கு ஒவ்வாமை இடம்பெறுகின்றவாறு செயற்பட்டுள்ளமை.

	சட்டங்கள், விதிகள், கட்டளைகளுக்கான தொடர்பு	**விபரம்**
(அ)	2008 இன் 36 ஆம் இலக்க நகரக் குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபை சட்டம்	
	(i) சட்டத்தின் அறிமுகம்	நகரக் குடியிருப்பு அபிவிருத்தி தொடர்பான தேசியக் கொள்கையை தயார் செய்வதற்கு மற்றும் மேற்படி கொள்கை அமுல்படுத்தப்படுவதை உறுதி செய்வதற்கு அதிகாரசபை தாபிக்கப்பட்டுள்ள போதிலும், அதிகாரசபை தாபிக்கப்பட்டு 14 வருடங்கள் கடந்துள்ள போதிலும், தேசிய கொள்கையை தயார் செய்வதற்கும், அமுல்படுத்துவதற்கு அதிகாரசபை தவறியுள்ளது. எவ்வாறாயினும், நேர்வரிசை அமைச்சினால்

		அமுல்படுத்தப்பட்ட கொழும்பு புத்தெழுச்சிக்கு உதவுவதற்கான கருத்திட்டத்தின் (SURP) ஒரு கூறாக நகர புத்தெழுச்சி கொள்கையை தயார் செய்வது உள்ளடக்கப்பட்டிருந்ததுடன், அதன் வரைவும் தயார் செய்யப்பட்டிருந்தமை அவதானிப்புச் செய்யப்பட்டது.
	(ii) 10 ஆம் பிரிவு	அதிகாரசபையினால் தவிசாளர் ஒருவர் உட்பட உறுப்பினர்கள் 14 பேருக்கு மேற்படாத வகையில் ஆலோசனைக் குழுவொன்று 2017 ஏப்ரல் மாதமளவில் நியமனம் செய்யப்பட்டிருந்த போதிலும், மீளாய்வு ஆண்டின் இறுதிவரையும் அதிகாரசபையின் பிரேரணைகள், திட்டங்கள், கருத்திடங்கள் மற்றும் செயற்றிட்டம் போன்ற அதிகாரசபையின் நோக்கங்கள் தொடர்பிலான பணிகள் இனங்காணப்பட்டிருக்கவில்லை.
	(iii) 16(1)(உ) உட்பிரிவு	இப்பிரிவின் ஏற்பாடுகளுக்கு அமைய குறைந்த செலவின வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டங்களுக்கு நிதி வழங்குவதற்கு ஆதன அபிவிருத்தியாளர்களிடமிருந்து சேவைக் கட்டணமாக நகர அபிவிருத்தி அதிகாரசபையினால் சேகரிக்கப்படுகின்ற சகல நிதிகளும் நகரக் குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் நிதிக்கு செலவு வைக்கப்பட வேண்டியுள்ளது. அவ்வாறாயினும் 2010 டிசம்பர் 14 ஆம் திகதிய அமைச்சரவை தீர்மான இலக்கம் 10/2951/504/012 இற்கமைய நகர அபிவிருத்தி அதிகாரசபையினால் இந்த சேவைக் கட்டணம் அறவிடுவது நிறுத்தப்பட்டுள்ளதனால் நகரக் குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபை மேற்படி வருமான வழியை இழந்துள்ளது. சேவைக் கட்டணம் அறவிடுவதை நிறுத்தும் சந்தர்ப்பத்தில் நகர அபிவிருத்தி அதிகாரசபையினால் அறவிடப்பட்டிருந்த ரூ.மி. 207.33 ஆன சேவைக்

		கட்டணத் தொகையை மீளாய்வு ஆண்டின் இறுதி வரை நகரக் குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபைக்கு பெற்றுக் கொள்ள முடியாது போயுள்ளது.
	(iv) 16(3) உட்பிரிவு	அதிகாரசபையின் ஆரம்ப மூலதனம் ரூ.மி. 5,000 ஆக இருத்தல் வேண்டும் என்பதுடன், இது பகுதி பகுதியாக அரசாங்க திரட்டிய நிதியத்திலிருந்து கிடைக்க வேண்டுமாயினும், மீளாய்வு ஆண்டின் இறுதியில் சுமார் 14 வருடங்கள் கடந்துள்ள போதிலும் அதிகாரசபைக்கு எந்தவொரு மூலதனமும் வழங்கப்பட்டிருக்கவில்லை.
(ஆ)	1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டம் 11 (ஆ) பிரிவு	நிதி அமைச்சரின் இணக்கப்பாட்டைப் பெற்றுக் கொள்ளாது அமைச்சரவையின் அங்கீகாரத்தின் பேரில் அதிகாரசபையினால் கடந்த ஆண்டில் ரூபா மில்லியன் 1,195 ஆன தொகை மற்றும் மீளாய்வு ஆண்டில் ரூபா மில்லியன் 958 ஆன தொகை நிலையான வைப்புக்களில் முதலீடு செய்யப்பட்டிருந்தது.
(இ)	2021 நவம்பர் 16 ஆம் திகதிய அரச நிதிகள் சுற்றறிக்கை இலக்கம் 01/2021	சுற்றறிக்கைக்கு அமைய கூட்டுத் திட்டமொன்று 5 வருட காலப்பகுதிக்கு தயார் செய்யப்பட்டு செயற்றிட்டம் மற்றும் வருடாந்த வரவு செலவுத்திட்டத்துடன் அடுத்த ஆண்டு ஆரம்பிக்க 15 நாட்களுக்கு முன்னர் உரிய சம்பந்தப்பட்ட தரப்பினர்களிடம் சமர்ப்பிக்கப்படல் வேண்டுமாயினும் அதற்கமைய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை என்பதுடன், அரசுக்கு உரித்தான தொழில்முயற்சிகளுக்கான நல்லாட்சி வழிகாட்டல் தொகுப்பின் ஆ பகுதியிலுள்ள மாதிரியமைப்புக்கு அமைய அதிகாரசபையினால் செயற்றிட்டம் தயார் செய்யப்பட்டிருக்கவில்லை. மேலும், ஆண்டின் பிரதான வரவு

		செலவுத்திட்டத்தில் மதிப்பீடு செய்யப்பட்ட நிதி நிலைமைக் கூற்று, மதிப்பீடு செய்யப்பட்ட காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் மதிப்பீடு செய்யப்பட்ட மூலதன செலவினங்கள் உள்ளடக்கப்படல் வேண்டுமாயினும் அதிகாரசபையினால் 2022 ஆம் ஆண்டுக்கு தயார் செய்யப்பட்டிருந்த வருடாந்த வரவு செலவுத்திட்டத்தில் மேற்படி விடயங்கள் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

2.2.3 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12 (எ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாட்டுக்கு அமைய பின்வரும் அவதானிப்புக்களைத் தவிர்த்து அதிகாரசபையின் தத்துவம், பணிகள் மற்றும் செயற்பாடுகளுக்கு ஒவ்வாமை ஏற்படாதவாறு நடவடிக்கை மேற்கொண்டுள்ளமை.

தத்துவங்கள், பணிகள் மற்றும் செயற்பணிகள்	**அவதானிப்பு**
2008 இன் 36 ஆம் இலக்க நகரக் குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபை சட்டத்தின் 15 ஆம் பந்தி	நகரக் குடியிருப்பு பிரதேசமொன்றின் சமுதாயத்தினரின் பொதுவான நலன்புரி மற்றும் சமூக மற்றும் கலாசார முன்னேற்றத்தை மேம்படுத்தல் மற்றும் குறித்த பிரதேசத்தின் நடவடிக்கைகளை நிருவகிப்பதை மேற்கொள்ள வேண்டுமாயினும், மீளாய்வு ஆண்டில் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டிரந்த துடுவேகொட மற்றும் நாவலப்பிட்டி நகரக் குறைந்த வருமான வீடமைப்புக் கருத்திட்டங்கள் 02 தவிர எந்தவொரு பௌதீக அபிவிருத்தி நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை என்பதுடன், மனித அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் 05 மாத்திரம் அமுல்படுத்தப்பட்டிருந்தன.

2.2.4 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12(ஏ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாட்டுக்கு அமைய அதிகாரசபையின் வளங்கள் சிக்கனமாகவும், வினைத்திறன்மிக்கவாறும் மற்றும் விளைதிறன்மிக்கவாறும் காலப்பகுதிகளுக்குள் குறித்த சட்டங்கள் விதிகளின் பிரகாரம் பெறுகை மேற்கொண்டு பயன்படுத்திக் கொள்ளப்பட்டிருக்கவில்லை என்பது.

(அ) அதிகாரசபையினால் 512 வீட்டு அலகுகளைக் கொண்ட நிர்மாணிப்புக்கள் நிறைவு செய்யப்பட்ட வீடமைப்புத் திட்டங்கள் 03 மற்றும் நிர்மாணிக்கப்பட்டு வருகின்ற வீடமைப்புத் திட்டமொன்று அமைந்துள்ள ஹெக்டயார் 2.32 அளவான காணியை உரிய நிறுவனங்களிடமிருந்து சுவீகரித்துக் கொள்ள மீளாய்வு ஆண்டின் இறுதி வரை நடவடிக்கை மேற்கொள்ளத் தவறியுள்ளமை. இதன் காரணமாக நிர்மாணித்து உரித்துக் கையளிக்கப்பட்டுள்ள வீட்டு உரிமையாளர்களுக்கு காணிகளின் உறுதிகளைப் பெற்றுக் கொடுப்பதன் தாமதம் காரணமாக வீடமைப்புத் திட்டங்களின் முகாமைத்துவக் கூட்டுத்தாபனங்களை தாபித்து வீடுகளின பொறுப்பை சாட்டுதல் செய்ய முடியாது போனது.

(ஆ) அதிகாரசபையினால் லுனாவ வீட்டு அலகுகள் 356 உம் விற்பனை அடிப்படையில் கடந்த ஆண்டில் நீக்கம் செய்யப்பட்டுள்ள போதிலும், வீட்டு உரிமையாளர்களுக்கு உறுதிகளைப் பெற்றுக் கொடுப்பது மீளாய்வு ஆண்டின் இறுதி வரை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. இதற்காக நகர அபிவிருத்தி அதிகாரசபை, கூட்டாட்சி முகாமைத்துவ அதிகாரசபை, நில அளவையாளர் திணைக்களம், உரித்துப் பதிவு அலுவலகம் மற்றும் மொரட்டுவை மாநகர சபையிடமிருந்து பெற்றுக் கொள்ள வேண்டியுள்ள அங்கீகாரங்கள் பெற்றுக் கொள்ளப்படாமை முக்கிய காரணமாக அமைந்துள்ளது.

(இ) அமைச்சரவை தீர்மான இலக்கம் MUDRH/2020/CP/45 இற்கு முரணாக அதிகாரசபையின் பணிப்பாளர் சபை பத்திர இலக்கம் 01/2021/15 இன் மூலம் பெற்றுக் கொள்ளப்பட்ட பணிப்பாளர் சபை அங்கீகாரத்துக்கு அமைய அதிகாரசபையின் அலுவலர்களுக்கு அறவிடப்படுகின்ற 20 சதவீதமான சேவைக் கட்டணத்தை அதிகாரசபை அலுவலர்களிடமிருந்து அறவிடாதிருப்பதற்கும், வீட்டு விற்பனை விலையாக அரசின் விலைமதிப்பை மாத்திரம் அறவிட்டுக் கொண்டு மேற்படி செலவினத்தை 25 வருட காலப்பகுதிக்குள் 2 சதவீத சலுகை வருடாந்த வட்டி விகிதத்தின் கீழ் மேற்கொள்வதற்கு வசதி செய்யும் முறையியலை அமுல்படுத்தவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதற்கமைய மீளாய்வு ஆண்டின்

இறுதியளவில் அதிகாரசபையின் அலுவலர்களுக்கு 22 வீட்டு அலகுகள் பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளதுடன், அமைச்சரவை தீர்மானத்திற்கு முரணாக நடவடிக்கை மேற்கொண்டுள்ளதன் காரணமாக அரசு இழந்துள்ள பெறுமதி ரூ.மி. 18.96 ஆகக் காணப்பட்டது.

(ஈ) 2022 யூன் மாதம் 16 ஆம் திகதிய பணிப்பாளர் சபை பத்திர இலக்கம் 05/2022/06 இன் கீழ் ரூ.மி. 44.78 பெறுமதிமிக்கதாக குத்தகைக்கு வழங்குவதன் மூலம் குத்தகை வருமானத்தை உழைத்துக் கொள்ளக்கூடியதாகக் காணப்பட்ட சஹஸ்புர வணிக அலகுகள் 67 மற்றும் பெறுமதிகள் இனங்காணப்படாதுள்ள சேவை அலகுகள் 57 இலவச கொடையின் பேரில் முகாமைத்துவ கூட்டுத்தாபனத்திற்கு நீக்கம் செய்ய தீர்மானிக்கப்பட்டிருந்தது.

(உ) 2020 டிசம்பர் 22 ஆம் திகதிய 20/1844/306/055 ஆம் இலக்க அமைச்சரவை தீர்மானத்துக்கமைய விற்பனை விலையில் 50 சதவீதத்தை அறவிட்டுக் கொள்ளாது ரூ.மி. 4.74 பெறுமதிமதிக்க லுனாவ வீடமைப்புத் திட்டத்தின் இலக்கம் 1/3/3 எனும் வீட்டு அலகு விற்பனை பெறுமதியில் 25 சதவீதம் அதாவது ரூ.மி. 1.185 மாத்திரம் அறவிடப்பட்டு வீட்டின் இருப்பாட்சியுரிமை வழங்கப்பட்டுள்ளது.

(ஊ) அதிகாரசபையினால் மக்களுக்காக நிர்மாணிக்கப்பட்ட அங்குலான தொடர்மாடி வீடமைப்புத் திட்டத்தில் காணப்பட்ட 288 வீடுகளில் ரூ.மி. 62.87 பெறுமதிமிக்க 53 வீட்டு அலகுகள் நிதி அறவிடப்படாது இலவச கொடைப்பத்திரம் மூலம் 2016 செப்தெம்பர் மாதம் 26 ஆம் திகதி முதல் 2019 பெப்ருவரி மாதம் 12 வரையான காலப்பகுதிக்குள் சினிமா கலைஞர்கள் மற்றும் விளையாட்டு வீரர்களுக்கு வழங்கப்பட்டிருந்தன. பின்னர் அதாவது 2019 செப்தெம்பர் மாதம் 18 ஆம் திகதிய அவி/19/2761/122/085 ஆம் இலக்க அமைச்சரவை தீர்மானத்திற்கு அமைய மேற்படி வீடுகளுக்கு நியாயமான தொகையை பயனாளிகளிடம் அறவிட்டுக் கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ள போதிலும் அதிகாரசபையினால் மீளாயவு ஆண்டின் இறுதி வரையும் எந்தவொரு தொகையும் அறவிடப்பட்டிருக்கவில்லை. மேலும் சட்ட மாஅதிபரின் 2022 டிசம்பர் 04 ஆம் திகதிய கடிதத்தின் அறிவுரைகளக்கு அமைய 32 வீட்டு அலகுகளின் இலவச கொடையை ரத்துச் செய்வதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(எ) வரையறுக்கப்பட்ட ரியல் எஸ்ரேட் எக்ஸ்சேன்ஜ் (தனியார்) கம்பனியை அதிகாரசபைக்கு பொறுப்பேற்றுக் கொண்ட போது இடம்பெற்றிருந்த ரூ.மி. 47.75 ஆன நிதி மோசடி தொடர்பாக சட்ட மாஅதிபரினால் 2021 அக்டோபர் மாதம் 28 ஆம் திகதி வழங்கப்பட்ட அறிவுரைகளுக்கு அமைய நட்டம் தொடர்பில் சம்பந்தப்பட்ட ஆட்களுக்கு எதிராக வழக்கு நடவடிக்கைளை தாக்கல் செய்ய முடியுமா என்பது பற்றி ஆராய்வதற்கு நிதிப் பிரமாணம் 103 (11 ஆம்

அத்தியாயம்) இன் கீழ் குறித்த நேர்வரிசை அமைச்சு நடவடிக்கை மேற்கொண்டு அது தொடர்பில் பொறுப்புக்கூற வேண்டிய ஆட்கள் மற்றும் அரசாங்கத்திற்கு ஏற்பட்டுள்ள நட்டத்தை சரியாக கணிப்பீடு செய்ய வேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ள போதிலும் நேர்வரிசை அமைச்சு அது தொடர்பிலான நடவடிக்கைகளை 2023 யூன் மாதம் வரையும் மேற்கொண்டிருக்கவில்லை.

(ஏ) முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தின் DMS/1523(Vol – I) ஆம் இலக்க 2019 மே மாதம் 22 ஆம் திகதிய கடிதம் மூலம் அதிகாரசபையின் அங்கீகரிக்கப்பட்ட பதவிகளுக்குரிய ஆட்சேர்ப்பு நடவடிக்கைமுறையானது பழைய மாதிரியமைப்புக்கு அமைய தயார் செய்யப்பட்டதாக உள்ளதனால் அதனை புதிய மாதிரியமைப்புக்கு அமைய இற்றைப்படுத்தி அங்கீகாரத்துக்காக சமர்ப்பிக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ள போதிலும், 2023 ஏப்ரல் மாதம் வரை அவ்வாறு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஐ) 2022 டிசம்பர் 31 ஆம் திகதிக்கு அதிகாரசபையின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் 153 மற்றும் அங்கீகரிக்கப்பட்ட ஒப்பந்த பதவியணி 13 ஆக உள்ளதுடன், குறித்த திகதியில் உண்மையான பதவியணி முறையே 126 மற்றும் 03 ஆகக் காணப்பட்டன. அதற்கமைய பதவியணியில் 37 வெற்றிடங்கள் காணப்பட்டதுடன், இவ்வாறு வெற்றிடம் காணப்படுவதானது நிறுவனத்தின் கீழ் மட்ட செயலாற்றுகையில் நேரடியாக தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

3 வேறு விடயங்கள்

(அ) அதிகாரசபையின் நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்வதற்காக 2008 இன் 36 ஆம் இலக்க நகரக் குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபை சட்டத்திற்கு அமைய நிறைவேற்றப்பட வேண்டிய நகர்ப்புற வசிப்பாளர்களின் பொருளாதார மற்றும் சமூக நிலைமையை இனங்காண்பது தொடர்பான ஆய்வு மற்றும் கற்கை நடவடிக்கைகளை நடாத்தல் மற்றும் தேசிய ரீதியில் ஏற்புடையதான நகர்ப்புற வீடமைப்புக் கடன் திட்டத்தை அமுல்படுத்தல் ஆகிய பணிகளை கூட்டுத்திட்டத்தில் உட்புகுத்தவோ அல்லது நிறைவேற்றியோ இருக்கவில்லை.

(ஆ) அதிகாரசபையின் 2022 ஆண்டுக்கு தயார் செய்யப்பட்ட செயற்றிட்டத்திற்கு அமைய 06 கருத்திட்டங்களை நிறைவு செய்யத் திட்டமிடப்பட்டிருந்ததுடன், 02 கருத்திட்டங்களில் எந்தவொரு பௌதீக முன்னேற்றமும் மீளாய்வு ஆண்டின் இறுதி வரை அடையப்பெற்றிருக்கவில்லை. மேலும் 04 கருத்திட்டங்கள் தொடர்பான நடவடிக்கைகளில் 5 சதவீதம் முதல் 16 சதவீதம் வரையான பௌதீக முன்னேற்றம் மாத்திரம் அடையப்பெற்றிருந்ததுடன், நிதிசார் முன்னேற்றம் 1

சதவீதம் முதல் 69 சதவீதம் வரையானதாகக் காணப்பட்டது. மேலும் 2022 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்ட 02 கருத்திட்டங்கள் செயற்றிட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் கணக்காய்வுப் பிரிவுக்கு உள்ளகக் கணக்காய்வாளர் பதவியொன்று மாத்திரம் அங்கீகரிக்கப்பட்டிருந்ததுடன், கணக்காய்வு அலுவலர் பதவிகள் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. இது தொடர்பாக முன்னைய கணக்காய்வு அறிக்கைகளிலும் சுட்டிக்காட்டப்பட்டுள்ள போதிலும் மீளாய்வு ஆண்டிலேனும் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவை பலப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. பிரதம உள்ளகக் கணக்காய்வாளர் பதவி நடுத்தர முகாமைத்துவ மட்டத்திலான பதவியொன்றாக தொடர்ந்தும் பேணிவரப்பட்டுள்ளதுடன், கணக்காய்வு அலுவலர்களை ஆட்சேர்ப்புச் செய்யாது முகாமைத்துவ உதவியாளர்கள் இருவர் மாத்திரம் இணைப்புச் செய்யப்பட்டுள்ளார்கள். மேலும் மீளாய்வு ஆண்டுக்காக அங்கீகரிக்கப்பட்ட உள்ளகக் கணக்காய்வுத் திட்டத்தில் உள்ளடங்கும் கணக்காய்வு நிகழ்ச்சித்திட்டங்கள் 18 இல் 4 நிகழ்ச்சித்திட்டங்கள் தொடர்பிலான கணக்காய்வு நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் அதிகாரசபையின் செயலாற்றுகையை மதிப்பீடு செய்வதும் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(ஈ) நிறுவனத்தினால் விளைதிறன்வாய்ந்த கட்டுப்பாட்டு முறையொன்றாக வரவு செலவுத்திட்டம் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என்பதுடன், வரவு செலவுத்திட்டமிடப்பட்ட செலவினங்களை உண்மைச் செலவினங்களுடன் ஒப்பிட்டுப் பார்த்த போது 1 முதல் 232 சதவீதம் வரை கனிசமான வித்தியாசங்கள் அவதானிப்புச் செய்யப்பட்டன. மேலும் வரவு செலவுத்திட்டத்தின் மூலம் ஒதுக்கப்படாத செலவினங்களான 06 செலவின விடயங்களுக்கு மீளாய்வு ஆண்டில் அதிகாரசபையினால் ரூபா 1,974,419 செலவிடப்பட்டுள்ளது.

(உ) அதிகாரசபையினால் மீளக்குடியமர்த்தும் அடிப்படையில் வீடுகள் வழங்கப்பட்ட 06 வீடமைப்புக் கருத்திட்டங்கள் தொடர்பாக மீளாய்வு ஆண்டின் இறுதியில் அறவிடப்பட வேண்டியிருந்த மொத்தக் கடன் தவணைகளின் பெறுமதி ரூ.மி. 112 ஆகும் என்பதுடன் இதில் 2-5 வருட காலமாக அறவிடப்பட வேண்டியுள்ள கடன் நிலுவை ரூ.மி. 47.31 ஆகும் என்பதுடன், 5 வருடங்களுக்கும் மேல் அறவிடப்பட வேண்டியுள்ள கடன் நிலுவை ரூ.மி. 30.12 ஆகும் என்பதுடன் மேற்படி பெறுமதி மொத்தக் கடன் தவணைப் பெறுமதியில் முறையே 42 சதவீதம் மற்றும் 27 சதவீதமாகும்.

(ஊ) அதிகாரசபையினால் விற்பனை அடிப்படையில் வழங்கப்பட்ட 04 வீடமைப்புக் கருத்திட்டங்கள் தொடர்பாக மீளாய்வு ஆண்டின் இறுதியில் அறவிடப்பட வேண்டியிருந்த மொத்தக் கடன் தவணைகளின் பெறுமதி ரூ.மி. 42.5 ஆகும்

என்பதுடன் இதில் 2-5 வருட காலமாக அறவிடப்பட வேண்டியுள்ள கடன் நிலுவை ரூ.மி. 11.3 ஆகும் என்பதுடன், 5 வருடங்களுக்கும் மேல் அறவிடப்பட வேண்டியுள்ள கடன் நிலுவை ரூ.மி. 22.8 ஆகும். மேற்படி பெறுமதி மொத்தக் கடன் தவணைப் பெறுமதியில் முறையே 27 சதவீதம் மற்றும் 54 சதவீதமாகும்.

(எ) லுனாவ வீட்டு அலகுகளை நீக்கம் செய்யும் போது ஆரம்ப கொடுப்பனவாக ஒரு வீட்டின் மொத்தப் பெறுமதியில் 25 சதவீதத்தை அதிகாரசபைக்கு அறவிட்டுக் கொள்வதற்கும் எஞ்சிய 75 சதவீதத்திற்கு அரச வங்கியொன்றுடன் இணைப்பு 25 வருட காலத்தில் செலுத்துவதன் அடிப்படையில் கடன் வசதிகளை பயனாளிகளுக்குச் செய்துகொடுத்தல் மற்றும் மேற்படி 75 சதவீதத் தொகையை 3 மாதங்களுக்குள் அதிகாரசபைக்கு அறவிட்டுக் கொள்வதற்கும் 2020 டிசம்பர் 22 ஆம் திகதிய அவி/20/1844/306/055 ஆம் இலக்க அமைச்சரவை தீர்மானத்தின் மூலம் அங்கீகாரம் கிடைத்துள்ளது. எவ்வாறாயினும், 2021 ஏப்ரல் மாதம் 09 ஆம் திகதிய மக்களின் உபயோகத்திற்காக வழங்கப்பட்ட இந்த வீடமைப்புக் கருத்திட்டத்திலிருந்து 2022 டிசம்பர் 31 ஆம் திகதிய வரையும் வங்கிக் கடன் அடிப்படையில் வீடுகளைப் பெற்றுக் கொண்டுள்ள 12 வீட்டு உரிமையாளர்களுக்காக வங்கிகளிடமிருந்து குறித்த விற்பனை பெறுமதியை பெற்றுக் கொள்ள முடியாது போயுள்ளது.

கையொப்பம் / டபிள்யு. பீ.சி. விக்ரமரத்ன

கணக்காய்வாளர் தலைமை அதிபதி